மண்ணும் மக்களும்

பண்பாட்டு ஆய்வு மாத இதழ்

ஜனவரி–2024 இதழ்–01 மார்கழி/தை



தொண்டை மண்டலமும் பிரம்ம சாத்தனும்
பி.திருச்சிற்றம்பலம்

ஆடையூர் நாடு
பழனிச்சாமி சிங்காரவேல்

புள்ளினங்கள் அறிவோம்
சரவண மணியன்

செப்பேடுகள்
மாரிராஜன்

தமிழர் கண்ட வானியல்
பாலபாரதி

நம் மண்ணின் மீன்கள்
ராமமூர்த்தி நாகராஜன்

கோயிற் கட்டிடக்கலை
விஜய் பட்

கீழக்குறிச்சி புத்தர்
மகாத்மா செல்வபாண்டியன்

கன்னல் சுவை சங்கத்தமிழ்
பௌசியா இக்பால்

தமிழர் இசை வரலாறு
சிவகௌரி

ஆற்றுப்படை வெளியீடு
www.aatrupadai.com

மண்ணும் மக்களும் – பண்பாட்டு ஆய்வு மாத இதழ்

ஆற்றுப்படை வெளியீடு

(2023 – 2024)

பதிப்புரிமை

கட்டுரை ஆசிரியர்களுக்கு

ஆக்கம்

வே. பார்த்திபன்

தொகுப்பு

பா. பிரபாகரன்

அ.சி. நடராஜன்

இந்த ஆய்வு மாத இதழ்,வணிக நோக்கம் ஏதுமின்றி தகவல்களை அனைவரிடமும் கொண்டு சேர்க்க வேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளது.இதிலுள்ள தகவல்கள் அனைத்தும் கட்டுரையாசிரியர்களுக்கே சொந்தம். இந்த கருத்துகளை பயன்படுத்த எண்ணினால் கட்டுரையார்களிடம் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம்.

ஆற்றுப்படை குழு

தொடர்புக்கு - 97900 76772 / 90255 16415

பொருளடக்கம்

பொருளடக்கம்

தமிழர் கண்ட வானியல்

கா.பாலகிருஷ்ணன் M.Sc., M.Ed., DIAE.,
(பாலா பாரதி)
முதல்வர் மற்றும் தாளாளர்,
பாரதி பதின்ம மேல்நிலைப் பள்ளி,
இந்தியன் வங்கிக் குடியிருப்பு,
திருச்சி, 620 021. தமிழ்நாடு.
புலனம் : 09944966826
மின்னஞ்சல் முகவரி : balabcc@gmail.com

பாறை ஓவியங்களில் வானியல் பதிவுகள்

பழங்காலத்தில் மனிதர்கள் தாங்கள் வாழ்ந்த குகைகளில் வரைந்து வைத்துள்ள ஓவியங்களைப் பாறை ஓவியங்கள் அல்லது குகை ஓவியங்கள் என்கிறோம். வரலாற்றுக் காலத்திற்கு முந்தைய இப்பதிவுகள் மனிதப் பண்பாட்டு வளர்ச்சியைத் தெரிந்துக்கொள்ள உதவுவனவாகும். பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில்தான் பாறை ஓவியங்கள் பற்றி உலகிற்குத் தெரியவந்தது. உலகின் பலபகுதிகளில் கிடைக்கும் இவ்வோவியங்களில் பிரான்ஸ் நாட்டில் லாஸ்காஸ், சாவெட் குகைகளில் கண்டுபிடிக்கப்பட்ட ஓவியங்கள் புகழ்பெற்றவை. அதுபோல இந்தோனேஷியா தீவில் கண்டுபிடிக்கப்பட்ட கை ஓவியங்கள் மிகவும் பழமையானவைகளாகக் கருதப்படுகின்றன. இந்தியாவில் மத்தியப்பிரதேசத்திலுள்ள பிம்பெட்காவில் புகழ்பெற்ற பாறை ஓவியங்கள் கிடைக்கின்றன. தமிழ்நாட்டிலும் நூற்றுக்கும் மேற்பட்ட இடங்களில் இத்தகைய ஓவியங்கள் கிடைப்பது சிறப்பானதாகும். தமிழ்நாட்டில் கிடைக்கும் ஓவியங்கள் பெரும்பாலும் சிவப்பு, வெள்ளை நிற ஓவியங்களாக உள்ளன. இவ்வோவியங்களில் மனித, விலங்கின உருவங்கள், வேட்டைக் காட்சிகள், சண்டைக் காட்சிகள், அன்றாடச் செயல்பாடுகள் போன்ற காட்சிகளுடன் வானியல் குறியீடுகளும் ஓவியங்களாகக் காணப்படுகின்றன.

பிரான்ஸ் நாட்டின் லாஸ்காஸ் குகைகளில் ஓரையான் உடுக்கணம், காளை உடுக்கணத்துடன் கார்த்திகை விண்மீன் கூட்டமும் வரையப்பட்டுள்ளன. இது

வரையப்பட்ட காலம் 15,000 ஆண்டுகள் என்கிறார்கள். அதாவது 15,000 ஆண்டுகளுக்கு முன்பாகவே வானில் உள்ள விண்மீன்களைக் கண்டு அவற்றைத் தொகுதிகளாகப் பிரித்துப் பதிவுச் செய்யும் வழக்கம் இருந்துள்ளது. இதுபோல ஓரையான் உட்பட பல உடுக்கணங்களைத் தமிழ்நாட்டிலும் தொல்பழங்கால மக்கள் குகைகளில் வரைந்து வைத்துள்ளனர். பாறை ஓவியங்களில் இரண்டுவகை உண்டு. ஒன்று வண்ணக் கலவைக் கொண்டு பாறைகளில் வரைவது (Pictographs) மற்றொன்றுப் பாறைகளைக் கீறி உருவங்களை உண்டாக்கும் பாறைக்கீறல் ஓவியங்கள் (Petroglyphs).

நீலகிரி மாவட்டம் கொணவக்கரையில் 'ஏர்பெட்' என்ற இடத்திலுள்ள ஒரு குகையில் பாறைக்கீறல்களாக வானியல் ஓவியங்கள் வரையப்பட்டுள்ளன. அவற்றில் மனிதன், தேள், பாம்பு ஆகிய உருவங்கள் முதன்மையாகக் காட்டப்பட்டுள்ளன. இவற்றில் மனித உருவம் ஓரையான் உடுக்கணத்தையும், தேள் உருவம் விருச்சிக உடுக்கணத்தையும், பாம்பு உருவம் நமது பால்வெளி மண்டலத்தையும் குறிப்பதாக இருக்கலாம். மேலும், இங்குச் சூரியன், நிலவு போன்ற உருவங்களும் காணப்படுகின்றன. இதுபோலப் பல இடங்களில் வானியல் தொடர்பான ஓவியங்கள் கிடைத்தாலும், அவற்றுள் 'புலிக்கரடு' ஓவியங்கள் தனித்துவமானவைகளாகத் திகழ்கின்றன. மதுரை மாவட்டம், பேரையூர் அருகிலுள்ள புலிக்கரடு என்ற குகையில் வெள்ளை நிறத்தில் நிறைய ஓவியங்கள் வரையப்பட்டுள்ளன. இவ்வோவியங்கள் பாறை ஓவியங்கள் ஆய்வாளரான திரு. க.த.காந்திராஜன் அவர்களால் கண்டுபிடிக்கப்பட்டன. இக்குகையின் தலைக்குமேலே உள்ள பாறையில் சூரியன், நிலவு உருவங்கள் ஒளிரேகைகளுடன் வரையப்பட்டுள்ளன. இரண்டுக்கும் இடையில் வளைகோடொன்று போடப்பட்டு அதில் குறுக்காகச் சிறு கோடுகள் போடப்பட்டுள்ளன. இந்த சிறு குத்துக் கோடுகள் எண்ணிக்கைக்காகப் போடப்பட்டுள்ளன. மேலும், இதில் பதினைந்து கோடுகள் உள்ளன. இந்த எண்ணிக்கை நிலவின் இரு நிலைகளான அமாவாசைக்கும் பௌர்ணமிக்கும் இடைப்பட்ட நாட்களின் எண்ணிக்கையாகும். இரண்டு ஒளிரேகைகளுடன் கூடிய வட்டங்களில் ஒன்று சூரியன் மற்றது நிலவு. எது சூரியன்? எது நிலவு? என்ற கேள்விக்கு சாதக நூலொன்றில் உள்ள பாடலிலிருந்து விடை கிடைக்கிறது.

"ஐந்திருபத் தொன்றேழ் அதன்பின்னோற்

கொன்பது பத்(து)

உந்திய வீரெட்டு நான் கொரு நான்
(கு)-உந்தும்
கதிராதி பாம்பீறாய்க் கட்டுரைத்த கோள்கட்(கு)
எதிரா வருங்கதிராம் என்."


(பக்கம்:4, காலச்சக்கரம், தஞ்சாவூர் சரசுவதி மகால் வெளியீட்டு எண்:125, தில்லைநாயகப் புலவர் இயற்றியது, பதிப்பாசிரியர் வித்துவான் திரு.அடிகளாசிரியர், முன்னாள் தமிழ்ப் பேராசிரியர், கரந்தைப் புலவர் கல்லூரி, தஞ்சாவூர்).

பொருள்: சூரியனுக்கு ஐந்து, சந்திரனுக்கு இருபத்தொன்று, செவ்வாய்க்கு ஏழு, புதனுக்கு ஒன்பது, வியாழனுக்குப்பத்து, வெள்ளிக்கு பதினாறு, சனிக்கு நான்கு, இராகுவிற்கு நான்கு கதிராகும்.

ஓவியத்தின் வலப்புறத்திலுள்ள வட்டத்தில் ஐந்து ரேகைகளும், இடப்புறத்திலுள்ள வட்டத்தில் இருபத்தொன்று ரேகைகளும் காட்டப்பட்டுள்ளன. மேற்கண்ட பாடலின் பொருள்படி வலப்புறத்திலுள்ளது சூரியன், இடப்புறத்திலுள்ளது நிலவும் ஆகும். நிலவு தேய்ந்து வளர்வது சூரியனின் ஒளியினால், மேலும் அது தேய்ந்து மறையும் காலம் பதினைந்து என்பது இவ்வோவியத்தின் பொருளாகும். இவை வரையப்பட்ட காலம் என்னவாக இருக்கும்? லாஸ்காஸ் ஓவியங்களில் காணப்படும் வானியல் குறியீடுகள் 15,000 ஆண்டுகள் பழமையானவையாதலால் அதுபோல வரையப்பட்ட இந்த ஓவியமும் மிகப் பழமையானதாகத்தான் இருக்கும். குறைந்தது 5000 முதல் 10,000 ஆண்டுகள் வரை பழமையானதாக இருக்கும் என்பது நமது மதிப்பீடு. அறிவியல் ஆய்வின் மூலம் காலத்தைக் கணிக்கும்போது அதன் பழமை நமக்குத் தெரியவரும். மேற்கூறிய பாடல் சினேந்திரமாலை என்னும் நூலில் உள்ளதாக ஆசிரியர் குறிப்பிடுகிறார். எனவே இப்பாடல் வடமொழியிலிருந்து வந்துள்ளது எனப் புரிந்துகொள்ளலாம். ஆனால், வடமொழிக்கு தமிழிலிருந்து போயுள்ளது என்பதை இந்த ஓவியம் மூலம் உறுதியாகக் கூறலாம். இக்குகையில் வாழ்ந்த கணியர்கள் வரைந்து வைத்துள்ள ஓவியங்கள் இவை. இவ்வோவியங்களின் எழுத்து வடிவங்களான பாடல்கள் ஓலைச்சுவடிகளில் எழுதி வைக்கப்பட்டன. ஓலைச்சுவடிகளை இருநூறு, முந்நூறு ஆண்டுகளுக்குமேல் பாதுகாக்க முடியாது.

மூல ஓலைச்சுவடிகள் அழிந்து விட்டாலும் அவற்றின் ஓவிய வடிவம் குகையொன்றில் கிடைப்பது சிறப்பானதாகும்.





புலிப்பொடவு பாறை ஓவியம்

ஆடையூர் நாடு

பழனிச்சாமி சிங்காரவேல்

திருக்கோவிலூர்
புலனம்: 9843464910

திருவண்ணாமலை நகருக்கு அருகில் உள்ள ஆடையூர் இன்று ஒருசிற்றூராக அமைந்திருந்தாலும் 1000 வருடங்களுக்கு முன்பு இந்த ஊர் ஒரு நாட்டுப்பிரிவின் தலைநகராக இருந்துள்ளது. இந்த நாட்டிற்கு உட்பட்ட பகுதியாகதான் திருவண்ணாமலை அமைந்திருந்தது. கல்வெட்டுகளில் மதுராந்தக வளநாட்டு ஆடையூர் என 11 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த கல்வெட்டுகளும், 13 ஆம் நூற்றாண்டில் பல்குன்றக்கோட்டத்து ஆடையூர்நாடு என்றும் 16,17 ஆம் நூற்றாண்டில் செங்குன்றக் கோட்டத்து ஆடையூர் என்று குறிப்பிடுகின்றன. ஆடையூர் நாட்டில் எல்லை தற்போதைய திருப்பத்தூர் மாவட்டம் புதூர்நாட்டு மலை வரை மேல் எல்லையாகவும் அப்பகுதியை ஆடையூர் மேல்பற்று என்றும் திருவண்ணாமலைக்கு அருகில் உள்ள குளக்குடி, மெய்யூர், வாய்விடாந்தாங்கல், போன்ற பகுதியை ஆடையூர்நாட்டு கீழ்பற்று என்ற பகுதியிலும் அமைந்திருந்ததைக் கல்வெட்டு குறிப்பிடுகிறது. தொண்டைமண்டலத்தில் அமைந்திருந்த மிகப்பெரிய நாட்டுப்பகுதியாக ஆடையூர் நாடு அமைந்திருந்தது.

ஆடையூரை நாட்டை ஆண்டவர்கள்:

ஆடையூர் நாட்டுப்பிரிவு இம்மாவட்ட வரலாற்றில் கிடைக்கும் நாட்டுப்பிரிவுகளில் வித்தியாசமானது சிறப்பானதும் ஆகும். இந்நாட்டுப்பிரிவில்தான் பல்வேறு குறுநில மன்னர் போன்ற அதிகாரிகள் ஆட்சி செய்து வந்ததை காலம் தோறும் அறியும்படி பல்வேறு கல்வெட்டுகள் கிடைக்கின்றன. குறிப்பாக முதலாம் கரிகால சோழ ஆடையூர் நாட்டாழ்வான், இரண்டாம் கரிகால சோழ ஆடையூர் நாடாழ்வான், பெரியுடையான் அமட்டாழாவான் வன்னிய மககள் நாயன் கரிகால சோழ ஆடையூர் நாடாழ்வான், மலையன் நரசிங்க பன்மனான கரிகால சோழ

ஆடையூர் நாடாழ்வான். பதஞ்சலி மாமுனிக் காடும்பெருமாள் ஆடையூர்நாடாழ்வான், ராஜகம்பீர ஆடையூர் நாடாழ்வான், கோனேரின்மை கொண்டானான கரிகால சோழ ஆடையூர் நாடாழ்வான் போன்ற பல அரசு அதிகாரிகள் இந்த ஆடையூர்நாட்டை ஆண்டு வந்தனர். இதுபோன்று ஒரு நாட்டுப்பிரிவை ஆண்ட அரசு அதிகாரிகள் பெயர் வேறெந்த நாட்டுப்பிரிவிற்கும் அறிய இயலவில்லை.

ஆடையூர்:


ஆடையூர் நாட்டின் தலைநகராக இருந்த ஆடையூரில் வரலாற்றுச் சிறப்பு மிக்க தொல்லியல் சான்றுகள் கிடைக்கின்றன. 10 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த செக்கு கல்வெட்டு ஒன்று அவ்வூரில் உள்ளது இந்த கல்வெட்டில், சகர ஆண்டு 877 (கி.பி. 955) வாணகோபாடி நாட்டின் பெண்ணை நதியின் வடகரையில் உள்ள காட்டாம்பூண்டி என்ற ஊரைச் சேர்ந்த சேக்கிழான் உலகளந்தான் வீரட்டன் என்பவர் தானமாகக் கொடுத்த செக்கு என்றும் இதில் எண்ணெய் ஆட்டுபவர்கள் திருவண்ணாமலை மகாதேவருக்கு ஒரு முறள் அளவு கொண்ட எண்ணெய்யை காணிக்கையாக வழங்க வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளது. மேலும் இவ்வூரில் உள்ள ஏரிக்கரையில் 10 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த மதகில் ஒரு கல்வெட்டு உள்ளது. இதில் *ஸ்வஸ்திறீ அருளயன் செய்த தருமம்* என்று குறிப்பிட்டுள்ளது. அதாவது அருளயன் என்பவர் இந்த ஏரி மதகினை செய்து அளித்துள்ளார். இது போன்ற தானங்கள் அறங்கள் அக்காலத்தில் வழக்கில் இருந்ததை இந்த இரண்டு கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன.

அண்மையில் பதிவு செய்யப்பட்ட சிறப்பான கல்வெட்டு ஒன்று ஆடையூர் கிராமத்தில் பாழடைந்த சிவன் கோயியில் கண்டெடுக்கப்பட்டது. இந்த கல்வெட்டு ராஜேந்திரசோழ தேவர்க்கு யாண்டு 13? ஆவது செயங்........ பன்மாகேஷ்வர ரக்ஷை என்று குறிப்பிடுகிறது. இதிலிருந்து ஆடையூரில் ஒரு சிவன் கோயில் இருந்தது தெரியவருகிறது. மேலும் திருவண்ணாமலை கோயில் கல்வெட்டில் ஆடையூரில் இருக்கும் சிவனின் பெயர் ராஜேந்திர சோழிஸ்வர முடைய நாயனார் என்று ஒரு கோயிலும் இரவிகுலஈஸ்வரமுடைய மகாதேவர் என்ற பெயரில் ஒரு கோயில் நிலம் பற்றி குறிப்பிடுகிறது. இராஜேந்திரசோழன் ஆட்சிக்காலத்தில் ஆடையூரில் இந்த சிவன் கோயில் கட்டப்பட்டிருக்கவேண்டும். அதற்கு இராஜேந்திர சோழன் பெயரை

வைத்ததும் அறியமுடிகிறது. மேலும் இந்த ஊர்நில எல்லையாக பள்ளிச்சந்தம் என்ற சமணர் கோயிலுக்கு கொடையாக விடப்பட்ட நிலம் பற்றிய குறிப்பும் இருக்கிறது. இந்த திருவண்ணாமலை கோயில் கல்வெட்டில் ஆடையூரில் நாட்டவர் சபை இருந்தது என்றும் ஆடையூரின் மற்றொரு பெயராக ராஜேந்திர சோழ நல்லூர் என்றும் ராஜேந்திரன் சோழன் சாலை என்ற தெரு இருந்ததையும் அறிகிறோம். ஆனால் காலபோக்கில் இந்த ஆடையூர் சிவன் கோயில் முற்றாக சீரழிந்து போனதால் அதன் தொன்மை, வரலாற்றுச் செய்திகள் முழுமையாக கிடைக்கப்பெறவில்லை. இவை தவிர ஆடையூர் 16 ஆம் நூற்றாண்டு கல்வெட்டு ஒன்று பள்ளியின் அருகில் கண்டெடுக்கப்பட்டது. மேலும் ஆடையூர் ஊரின் முகப்பில் 10 ஆம் நூற்றாண்டு எழுத்தமைதி கொண்ட சன்னியாசி கல்லில் கிரந்த கல்வெட்டு ஒன்று உள்ளது. இதில் பீஜ மந்திர குறிப்பு உள்ளது. அருகில் உள்ள பலகைச் சிற்பத்தில் திருவண்ணாமலையின் மலைப்படம் சிற்பமாக வடிக்கப்பட்டுள்ளது.

பல்வேறு வரலாற்றுச் சிறப்புகளைக் கொண்ட ஆடையூரைக் கொண்டாடுவோம்.







குண்டான்குழி மகாதேவர் கோவில்

சக்திபிரகாஷ்

ஆதிவனம் பதிப்பகம்
ஈரோடு
புலனம்:9442569690

புதுச்சேரியில் இருந்து விழுப்புரம் செல்லும் சாலையில் அமைந்துள்ள ஊர் மதகடிப்பட்டு. தற்போது சிறு கிராமமாக தோற்றமளிக்கும் இவ்வூர் சோழர் காலத்தில் எவ்வாறு சிறப்புற்று விளங்கியது என்பதை இங்குள்ள கோயிலைக் கொண்டு நாம் அறிந்துகொள்ள முடிகிறது. சோழர்கள் காலத்தில் ஜெயங்கொண்ட சோழமண்டலம், திரிபுவன மாதேவி சதுர்வேதி மங்களம் என்று இவ்வூர் அழைக்கப்பட்டுள்ளது. இதில் "ஜெயங்கொண்டான்" என்பது இராஜராஜ சோழன் பல நாடுகளை வென்றதாலும், கப்பற்படையை கொண்டு எண்ணாயிரம் தீவுகளை வென்றதாலும் வழங்கப்பட்ட சிறப்பு பெயர் ஆகும். ஜெயங்கொண்டான் என்னும் பெயருடைய சில ஊர்கள் பாண்டிய நாட்டிலும், சோழ நாட்டிலும் உண்டு. திரிபுவனமாதேவி என்பது இராஜராஜனின் தேவியருள் ஒருவர். இதில் சதுர்வேதிமங்கலம் என்பது பிராமணர்கள் குடியிருப்பு பகுதியாகும். இதன் மூலம் இராஜராஜ சோழனால் உருவாக்கப்பட்ட ஊர்களில் இதுவும் ஒன்று என்பது புலப்படுகிறது.

ஆக்கப்பெறும் நிவேதன உணவு. கோயிலில் நடைபெறும் திருவிழா மற்றும் பூசையில் நிகழும் ஸ்ரீ பலிக்கும் நிலங்கள் கொடுத்ததை குறிப்பிடுகிறது.

கல்வெட்டுக்கள் :

மெய்க்கீர்த்தி கல்வெட்டுகள் :

1) முதலாம் ராஜராஜனின் "திருமகள் போலப் பெருநிலச் செல்வி" எனத் தொடங்கும் மெய்க்கீர்த்தி பாடல் பொறிக்கப்பட்டுள்ளது.

2) முதலாம் ராஜேந்திரன் சோழனின் "ஸ்வஸ்தி ஸ்ரீ திருமன்னி வளர இருநில மடந்தையும் " எனத் தொடங்கும் மெய்க்கீர்த்தியும், முதலாம் ராஜாதி ராஜனின் "ஸ்வஸ்தி ஸ்ரீ திங்களேர் தருதன் தொங்கல்வெண் குடை" எனத் தொடங்கும் மெய்க்கீர்த்தியும், இரண்டாம் ராஜேந்திரனின் "திருமாது புவியெனும்" எனத் தொடங்கும் மெய்க்கீர்த்தியும், வீர ராஜேந்திரனின் "ஸ்வஸ்தி ஸ்ரீ வீரமே துணையாக" எனத் தொடங்கும் மெய்க்கீர்த்தியும், முதலாம் குலோத்துங்க சோழனின் "திருமன்னி விளங்கும் பூமே லரி" எனத் தொடங்கும் அரிய மெய்க்கீர்த்தியும், விக்கிரம சோழனின் "ஸ்வஸ்தி ஸ்ரீ பூமாது புணரப் புவிமாது" எனத் தொடங்கும் மெய்க்கீர்த்தியும் கல்வெட்டாக பொறிக்கப்பட்டுள்ளன.

3) முதலாம் இராஜராஜன் (கி.பி 1012) காலத்தில் விஷ்ணு சேரியைச் சேர்ந்த பத்தங்கி திருவையாறு தேவ கிரமவித்தன் என்பான் திருகுண்டாங் குழி மகாதேவர்க்கு நந்தா விளக்கு கொண்றெரிப்பதற்காக 96 ஆடுகள் கொடுத்துள்ளான் என்பது கல்வெட்டு செய்தி.

பல குடிகள் சேர்ந்து வாழும் இடம் சேரி எனப்பட்டது. சோழமண்டல கரையில் புதிதாக தோன்றிய ஒரு சேரி புதுச்சேரி என்று பெயர் பெற்றது . இதுவே இன்று பாண்டிச்சேரி என்று திரிந்துள்ளது. பெருமாள் கோயிலில் பணிபுரியும் பிராமணர்களுக்கு தனியே ஏற்படுத்திய சேரிகளை விஷ்ணு பெயரிலேயே அமைத்துள்ளனர். இங்கு மொத்தம் 12 சேரில் சேரிகள் அமைந்துள்ளதாக தெரிகிறது. மதுசூதனச்சேரி, கேசவ சேரி, வாமனச்சேரி, மாதவ சேரி, நாராயணசேரி, கோவிந்த சேரி திரிவிக்கிரமசேரி, ஸ்ரீதரசேரி, தாமோதரசேரி, பத்மநாபசேரி ரிஷிகேஷ சேரி விஷ்ணு சேரி என்பன ஆகும்.இக்கல்வெட்டில் விஷ்ணு சேரியைக் சேர்ந்த பத்தங்கி திருவையாறு தேவ கிரமவித்தன் என்பவன் மகாதேவர்க்கு நந்தா விளக்கு எரிக்க 96 ஆடுகள் கொடுத்துள்ளான் என்பது செய்தி. கோயில்களில் நந்தா விளக்கு இடைவிடாமல் தொடர்ந்து எரிப்பது வழக்கம் அதற்காக செலவுக்காக பெருமக்களின் பொறுப்பில் ஆடுகளை தானமாக வழங்கி அதன்மூலம் கிடைக்கும் வருவாயைக் கொண்டு விளக்குகள் எரிக்கபட்டன.

4) முதலாம் இராஜராஜன் காலத்தில் திரிபுவன மாதேவி சதுர்வேதி மங்கலத்து சபையார் 13 பிராமணரிடம் இருந்து விலை கொடுத்து வாங்கிய நிலங்களை பனிரெண்டாம் தரத்தின் படி வரியிருக்க முடிவு செய்ததை குறிப்பிடுகிறது. அந்நாளில் நிலங்கள் அவ்வப்போது அளவிடப்பட்டு நிலத்தின் தரத்தை பொறுத்து, அதற்கு ஏற்ப நிலவரி விதித்தனர் .நிலத்தின் தரத்தை "தரப்பொத்தகம்" என்னும் பதிவேடு பாதுகாக்கப்பட்டு வந்ததை அறியலாம். கல்வெட்டின் படி நிலத்தை பன்னிரண்டாம் தரமாக கருதி வரி வசூலிக்கபட்டத்தை அறிந்து கொள்ள முடிகிறது.

5) முதலாம் இராஜராஜன் காலத்தில் திருகுண்டாங் குழி மகாதேவருக்கு திருவமுதுக்கும், திருப்பலிக்கும் ,திருவிழாக்கும் நிலங்கள் அளித்தமையை கல்வெட்டு குறிப்பிடுகிறது. திருவமுது என்பது கோமில்களில் இறைவன் வழிபாட்டிற்கெனத் தூய முறையில் ஆக்கப்பெறும் நிவேதன உணவு. கோயிலில் நடைபெறும் திருவிழா மற்றும் பூசையில் நிகழும் ஸ்ரீ பலிக்கும் நிலங்கள் கொடுத்ததை குறிப்பிடுகிறது

6) முதலாம் இராஜராஜன் காலத்தில் கோயிலில் சிவப்பிராமணர் கால் நந்தா விளக்கு எரிக்க ஏற்றுக்கொண்டதை மற்றொரு கல்வெட்டு தெரிவிக்கிறது.

7) முதலாம் ராஜேந்திரன் (கி.பி 1015) திருக்குண்டாங்குழி பரமேஸ்வர சுவாமிகளுக்கு மதுசூதனச் சேரியைச் சேர்ந்த திருமிழலைக் கௌதமன் செட்டி விரட்டனான உத்தம நம்பி என்பான் நந்தா விளக்கொன்றெரிக்க 90 ஆடுகள் கொடுத்தமையை தெரிவிக்கிறது. இதில் மிழலை என்பது சோழர் காலத்தில் மாயவரம் பகுதியில் அமைந்த மிழலை நாட்டை குறிப்பதாகும் . தற்போது மிழலை என்ற ஊர் மாயவரத்தில் இருந்து 12 கால் தொலைவில் அமைந்துள்ளது.

8) இராஜேந்திரன் (கி.பி 1016) கோவிந்த சேரி ஆலந்தூர் காஸ்யபன் மகாதேவனான திருஞானசம்பந்தடிகள் என்பார் ஐம்பது நிறையுள்ள மூடியுடன் கூடிய மலையன் கெண்டி ஒன்றைத் திருக்குண்டாங்குழி மகாதேவருக்கு வழங்கியமை பற்றியும்

சூரசூளா மணிச்சேரி வெள்ளிலைப் பாக்கத்து ஆடவல்லவன் தில்லையழகன் என்பான் வைத்த கால் நந்தா விளக்கு பற்றியும் குறிப்பிடுகிறது. இதில் குறிப்பிடும் கெண்டி என்பது குவளையின் உடற்பகுதியில் தூம்புகுழலுடன் அமைக்கப்பட்டது. இறைவழிபாட்டில் ஆகம விதிப்படி நீர் இறைக்க பயன்படுத்துவது.

9) இராஜேந்திர சோழன் (கி.பி 1016) ஸ்ரீ கார்யந்திரித்துகின்ற கூட்டப் பெருமக்கள் சிவப்பிராமணர் நால்வருக்குத் திருவுண்ணாழிகையில் திருப்பணி செய்வதற்கு நிலமளித்த செய்தியை தெரிவிக்கிறது.

10) முதலாம் ராஜேந்திரன் காலத்தில் பூவம் என்பவள் வைத்த நந்தா விளக்கு பற்றிய ஒரு கல்வெட்டும் உள்ளது.

11) இராசாதி ராசன் காலத்தில் திருகுண்டாங்குழி மகாதேவர்க்கு தயிரமுது படைத்தமை பற்றியது.

12) முதலாம் குலோத்துங்கன் (கி.பி 1075) கோயிலில் உள்ள சப்த மாதருக்கு திருவமுது படைக்க பிராமண பெண்கள் சிலர் 45 பொற்காசுகள் கொடுத்ததைப் பற்றி கல்வெட்டு.

13) முதலாம் குலோத்துடன் (கி.பி 1114) ஆம் ஆண்டு தட்சிணாமூர்த்தி தேவருக்கு அமுதப் படைக்க சிவப்பிராமனர்கள் ஒப்புக்கொண்டு நெல்லை பெற்றுக்கொண்ட செய்தி குறிப்பிடப்படுகிறது.

14) விக்ரமன் (கி.பி 1026) திருக்குண்டாங்குழி மகாதேவருக்கு பொய்யா மொழி என்ற பெயரில் ஒரு நந்தனம் அமைக்கப்பட்ட செய்தி குறிப்பிடப்பட்டுள்ளது.

15) திருக்குண்டாங்குழி மகாதேவர்க்கு சீரீளங்கோ பட்டன் சந்தி விளக்கு வைத்ததை தெரிவிக்கிறது. திருக்கோயில்களில் ஆறு வேலைகளிலும், அதாவது ஆறு காலமும் வழிபாடு நிகழ்த்துவது சிறப்புடையது ஆகும் . அதில் பகலும் இரவும் கூடும் வேளையில் ஏற்றப்படும் விளக்கு சந்தி விளக்கு ஆகும். சந்தி விளக்கு பெரும்பாலும் மாலையில் தான் ஏற்றப்படுகிறது, சில இடங்களில் காலையில் ஏற்றப்படுவதும் உண்டு.

16) திருக்குண்டாங்குடி பரமேஸ்வர ஸ்வாமிகளுக்கு சிவப்பிராமணர்கள் இவ்வூர் கோதண்டராமச்சேரி திருமிழிலை வீற்றிருந்தான் பட்டன் பிராமணி ஆண்டமைச்சானி கொடுத்த 12 ஆடுகள் பெற்றுக் கொண்டு சந்தி விளக்கு எரிக்க ஏற்று கொண்டதை குறிக்கிறது.

17) பெருங்குறிப் பெருமக்கள் கோயில் பண்டாரத்திலிருந்து 37 1/2 காசு பெற்றுக்கொண்டதோடு சில நிலங்களை விற்றுக் கொடுத்ததோடு வட்டியாக கோயிலுக்கு நெல் அளிக்கவும் ஒப்புக்கொண்டதை தெரிவிக்கிறது. பெருங்குறி பெருமக்கள் என்பது சதுர்வேதி மங்களத்தை அமைந்த ஊர் நிர்வாக சபை மற்றும் பிற சபைகளின் உறுப்பினர்கள் ஆவர் .

18) அடுத்தது கிரந்தத்தில் சில கல்வெட்டுக்கள் அமைந்துள்ளன. அவற்றில் அரசனின் ஆணைப்படி கொற்ற மங்கலத்தைச் சேர்ந்த நாராயணன் என்பான் குண்டாங்குழி கிராமத்தை நிர்வகித்து வந்ததை தெரிவிக்கிறது .

19) அடுத்து கோயிலில் நிவந்தம் பற்றியது. இதன் மூலம் வரும் வட்டியை கொண்டு உணவு படைக்கவும் தும்பை பூக்களால் மாலை அணிவிக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டது. 84 பெருமக்கள் கிராம காரியங்கள் செய்தாக கல்வெட்டு தெரிகிறது.

20) ஒரு நந்தா விளக்கெரிக்க 90 ஆடுகள் கொடுத்த செய்தியும், வானவன் மாதேவி நல்லூர் என்ற பெயரில் ஊர் உண்டாக்கி மக்களை குடியேற்றியதையும் குறிப்பிடுகிறது.

21) அடுத்து கோயிலுக்கு வெள்ளித் திருமேனி கோயிலுக்கு செய்து கொடுத்ததை தெரிவிக்கிறது. ஆனால் தற்போது வெள்ளித் திருமேனி அங்கு காணப்படவில்லை.

22) பாற்குளத்து விஷ்ணுதாசக்கிர பவித்தன் என்பான் கருவறை மூன்றாவது தளத்தையும் திருமண்டபத்தின் மூன்றாம் தளத்தையும் கட்டுவதற்கு பொன் கொடுத்ததோடு, காலோடு கூடிய தளிகை ஒன்றையும் அமுதுண்ணக் கொடுத்ததை குறிக்கிறது. தங்கத்தால் செய்யப்பட்ட நிவேதனத் தட்டு தளிகை என்பப்படும்.






திருவரங்கம் காத்த பெருமான்

வே.பார்த்திபன். DME,DIAE

ஆற்றுப்படை

திருச்சிராப்பள்ளி

தென்னிந்திய கல்வெட்டுகள் தொகுதி 24 முழுவதும் ஸ்ரீரங்கம் கல்வெட்டுகளே.அன்று திருவரங்கம் பாண்டிய குலாசனி வளநாட்டின் கீழ் விளாநாடு எனும் நாட்டின் பிரிவாய் அமைந்திருந்தது.

குலோத்துங்கர் காலக் கல்வெட்டுகளில் பெரும்பாலானவை அரங்கர் கோயில் திருமடைப்பள்ளிப்புறமான தண்டுறை-காரைக்குடி பற்றியே பேசுகின்றன. விளத்தூர் நாட்டைச் சேர்ந்த இவ்விரண்டு ஊர்களும் காவிரிக் கரையில் அடுத்தடுத்து இருந்தவை. காவிரியின் வெள்ளப் பெருக்கால் இவ்வூர்களின் நிலங்கள் மணலடித்து விளையாதிருந்தன. இதனை குலோத்துங்கசோழனின் கல்வெட்டுகள் உணர்த்துகிறது(ARE.NO.110.of.1948-49)

இக்காலகட்டத்திலே காவிரி பாயும் வழிநெடுங்கிலும் உள்ள சில கோவில்கள் இதேபோல் அழிந்துபட்டுள்ளன.

உதாரணமாய் பெட்டவாய்த்தலை அருகேயுள்ள தேவஸ்தானம் எனும் ஊரில் “திருப்பொன்னோடை பரமேஸ்வரர்” எனும் மூன்றாம் நந்திவர்மர் கால கற்றளி ஒன்று காவிரி வெள்ளத்தால் அழிந்துபட்டுள்ளது. நந்திவர்மன் முதல் பராந்தகர்,ராஜராஜர்,ராஜேந்திரர்,குலோத்துங்கன் கல்வெட்டுகள் வரை இக்கோவிலில் உண்டு. சிதைந்த இக்கோவிலின் உறுப்புகளை ஆங்கிலேயர்காலத்தில் ஒரு கலிங்கு பாலம் கட்டியுள்ளனர். இக்கோவிலுக்குரிய 30ற்கும் மேற்பட்ட கல்வெட்டுகள் கட்டுரையாளரால் கண்டறியப்பட்டு ஆவணப்படுத்தப்பட்டது. குலோத்துங்கனின் ஆட்சிகாலத்தில் ஏற்ப்பட்ட பெருவெள்ளத்தில் இக்கோவில் முழுவதும் சிதைந்து போயுள்ளது. இதே போன்று திருச்சியிலுள்ள பெருங்குடியிலுள்ள அகஸ்தீஸ்வரர் எனும் கோவிலும் வெள்ளத்தினால் மணலால் மூடப்பட்டு தொல்லியல்துறையினால் மீட்கப்பட்டது.

திருஞானசம்பந்தரால் பதிகம் பாடல்பெற்ற புள்ளமங்கை ஆலந்துறையார் கோவிலும் காவிரியின் வெள்ளப்பெருக்கினால் மணலால் மூடப்பட்டதே.

“தணியார்மதி யரவின்னொடு

வைத்தானிடம் மொய்த்தெம்

பணியாயவன் அடியார்தொழு

தேத்தும்புள மங்கை

மணியார்தரு கனகம்மவை

வயிரத்திர ளோடும்

அணியார்மணல் அணைகாவிரி

ஆலந்துறை யதுவே”

காவிரியின் மணலே ஆலந்துறையார் கோவிலுக்கு அணையாக அன்று இருந்ததென்ற இப்பாடலின் வாயிலாக காவிரி ஆறு அன்று இக்கோவிலின் அருகே வரையிலும் காவிரியின் தடம் இருந்ததென்பதனை அறியலாம்.

திருரங்கத்தின் சில நிலங்கள் நூறாண்டுகளும் மேலாய் விளையாதவையாக அக்காலகட்டத்தில் இருந்ததாய் சுட்டப்பட்டுள்ளது.அன்றைய காவிரியின் வெள்ளத் தாண்டவம் எவ்வாறு இருந்தது என இதன் வாயிலாய் நன்கு புலனாகிறது.

நெடுங்காலம் தரிசாகக் கிடந்த இவ்விரு ஊர்களின் நிலங்களை விளைச்சலுக்கு மீண்டும் கொண்டுவர குலோத்துங்கர் காலத்தில் முயற்சி மேற்கொள்ளப்பட்டது.சோழதேச அரசியரும் அரசு உயர் அலுவலர்களும் படைத்தலைவர்களும் அரசு சார் பணிப்பெண்களும் பணிமகன்களும் நிலக்கிழார்களும் இப்பணியில் ஈடுபட்டனர்.

சுங்கம் தவிர்த்த சோழன்

ஒரு வேலி நிலம் ஒரு காசு என மிகக் குறைந்த விலைக்கு விற்கப்பட்ட இந்நிலத்துண்டுகளின் மீதான அனைத்து வரிகளும் குலோத்துங்கனால் நீக்கப்பட்டன. நீர்நிலைகளுக்கான ஆளுழைப்புத் தந்தால் போதுமானது என்று

தெரிவிக்கப்பட்டது. பயிர் விளையுங் காலத்து ஒரு வேலி விளைச்சலுக்கு வரியாக 8 கலம் நெல் கோயில் மரக்காலான பள்ளி கொண்டானால் அளந்து கோயிற் பண்டாரத்தில் சேர்ப்பித்தால் போதுமானது. வரி விலக்குடன் குறைவான விலையில் பெறப்பட்ட இத்தகு நிலத்துண்டுகள் பூந்தோட்டங்களாக்கப்பட்டு மீண்டும் இறைவனுக்கே வழங்கப்பட்டன. மணலடித்த நிலத்தைத் திருத்தி, அதைப் பூந்தோட்டமாக்க உழைப்பாளிகளை அமர்த்தவும் அவர்களுக்கு வாழ்வூதியம் வழங்கவும் நிலம் பெற்றவர்கள் பொறுப்பேற்றனர். பொதுவாக இத்தகு நிலந்திருத்தலுக்கு இரண்டு ஆட்களே போதுமான நிலையில் ஆளொன்றுக்கு நாளும் குறுணி நெல் கூலியாகவும் உடைக்கு என காசு இரண்டும் அளிக்கப்பட்டன.

விலைக்குப் பெறப்பட்டுத் திருத்தப்பட நிலங்கள் பொதுவில் 'விளாகம்', 'நந்தவனம்' எனப் போற்றப்பட்டாலும் ஒவ்வொன்றுக்கும் சிறப்புப் பெயர் இருந்தது. சில துண்டுகள் விலைக்குப் பெற்றவர் பெயரை ஏற்க, இன்னுஞ் சில அரங்கன் தொடர்பான பெயர்களைக் கொண்டன. அப்படிப் பெயரேற்று அமைந்த நந்தவனங்களுள் காலத்தால் பழைமையான புகழாலையன், வாணாதிராயரால் அமைக்கப்பட்டது.

மணலடித்துப் பல்லாண்டுகள் பயிர் விளையாதிருந்த நிலங்களை விலைக்குப் பெற்று விளை நிலங்களாக்கிய இந்நந்தவன பணியில் பலர் ஈடுபடுத்தப்பட்டனர்.

அருமொழி ராஜாதிராஜனான வாணாதிராஜர், ஆதித்தன் வேதவனமுடையானான நெரியன் மூவேந்த வேளான், சோழப் பல்லவரையர்,ராஜேந்திரசோழ மகாபலி வாணாதிராஜர், இராஜராஜன் மதுராந்தகனான வற்சராஜர், அரையன் ஆதிநாதனான காராணை விழுப்பரையன், அரையன் கருடவாகனனான காலிங்கராயர், நாராயணன் மலைக்கினிய நின்றானான மும்முடிசோழ விழுப்பரையர்,மழவரையர்,சீராளன் திருச்சிற்றம்பலமுடையானான வீரவிச்சாதிர மூவேந்த வேளார், ஆதித்தன் திருவரங்கதேவனான விருதராஜ பயங்கர விஜயபாலர், கண்ணகன் கருமாணிக்கமான வளவ விச்சாதிரப் பல்லவரையர், பள்ளிகொண்டான் கூத்தனாரான விழிஞத்தரையர், கருமாணிக்கன் ஆதித்த தேவனான சேதிராயர், வளவன் விழுப்பரையன், ராஜவல்லபப் பல்லவரையர், மாதவன் திருவரங்க தேவனான அதளையூர் நாடாள்வான், அரையன் சேந்தனான ராஜேந்திரசோழ அதிகமானார்,எனப் பதினேழு அரசு அதிகாரிகள் இந்நந்தவன மேம்பாட்டில் ஈடுபட்டுள்ளனர்.

சேனாபதிகள்' என்றழைக்கப்பட்ட சோழர் படைத்தலைவர்களான இளங்கோவேளார், வீரராஜேந்திர அதியமான், செய்யபாதம், தளியில் மதுராந்தகனான ராஜேந்திர சோழக் கிடாரத்தரையன், ராஜேந்திர சோழனான கங்கைகொண்ட சோழ முனையதரையர், வீரசோழ முனையதரையர் எனும் அறுவரும் அதிகாரிகளைப் போலவே இந்நந்தவன வேள்வியில் பங்கேற்று மணலடித்த நிலங்களை விளை நிலங்களாக மாற்ற உதவியுள்ளனர்.

குலோத்துங்கரின் அரசியரான ராஜராஜ அருமொழியாரான தென்னவன் மாதேவி, வளவன் மாதேவி, உலகமாதேவி ஆகியோரும் இப்பணியில் பங்கேற்றனர். அரசியர், அதிகாரிகள், படைத்தலைவர்கள் இவர்தம் பணிப்பெண்களான (பெண்டாட்டி) குணவல்லி, ராஜகேசரிவல்லி, ராஜமாணிக்கம் ஆகியோரும் இப்பணிக்கு துணைநின்றனர்.

மணலடித்த நிலப்பகுதிகளைத் திருத்தி விளைவுக்குக் கொணர்ந்த குலோத்துங்கரின் ஐம்பதாண்டு ஆட்சிக்காலத்தில் காவிரி, கொள்ளிடம் சார் ஊர்கள் எத்தகு நீர்ப்பாசன வசதிகளைப் பெற்றிருந்தன என்பதையும் இக்கோவிலிலுள்ள குலோத்துங்கரின் 83 கல்வெட்டுகள் வழி அறியமுடிகிறது.திருரங்க பெருமாளை தமது குலதெய்வம் என்று குலோத்துங்கன் கூறிக்கொள்கிறார். இக்காரணத்தினாலோ என்னவோ இம்மன்னரால் அதிகம் திருப்பணி செய்யப்பட்டது இத்திருக்கோவில்.ஆற்றிலிருந்து தலைவாய் மதகு வழி வெளிப்பட்ட நீர் அதற்கென அமைந்த நீரோடு கால்களில் ஓடிப் பெருவாய்க்கால்களை அடைய, அவை அந்தந்த ஊர்களுக்கான வாய்க்கால்களுக்கு நீர் பிரிக்க, உள் வாய்க்கால்களும் உட்சிறு வாய்க்கால்களும் ஊரின் உள்ளார்ந்த நிலத்துண்டுகளுக்குப் பாய்ந்தன. நாட்டுக்குப் பாய்ந்தது நாட்டு வாய்க்காலாகவும் ஊருக்குப் பொதுவாக நீரெடுத்துச் சென்றது ஊர்ப் பொது வாய்க்காலாகவும் அமைய, வேளாளர் ஊர்களுக்குச் சென்றவை அவை ஓடிய திசையின் பெயர் பெற்றன (கிழக்கோடிய வாய்க்கால், தெற்கோடிய வாய்க்கால்).

அந்தண ஊர்களுக்கு வெட்டப்பட்ட வாய்க்கால்கள் அரசர், அரசியர், கடவுளர் பெயர்கள் கொள்ள, (கேரளாந்தக வாய்க்கால், திரிபுவனமாதேவி வாய்க்கால், திருமார்பிடங் கொண்டான் வாய்க்கால்) அங்கமைந்த வதி, கண்ணாறு எனும் சில வாய்க்கால்கள் உள் நிலங்களை ஈரப்படுத்தின. வதிகள் சிறப்புப் பெயர்களுடன் விளங்க (வீரசோழ வதி, லோகமாதேவி வதி, சந்திரசேகர வதி), கண்ணாறுகள் எண்

வரிசையேற்றன. என்றாலும் சிறப்புப் பெயருடன் குறிக்கப்பட்ட கண்ணாறுகளும் இருந்தன.

திருவரங்கம் கோயில் சார்ந்த நிலங்களை அளக்க 'பெரிய திருக்கோபுரத்துக் கீழைக்கோல் 'என்றழைக்கப்பட்ட சிறப்பு அளவுகோல் பயன்படுத்தப்பட்டாற் போலக் கோயிலுக்கு வரும் நெல்லையளக்க இறைவன் திருப்பெயர் கொண்ட 'பள்ளிகொண்டான் மரக்கால்' உதவியது.காவிரியால் சிதைந்த திருவரங்கத்தினை மீண்டும் மீட்ட பெருமை சோழப்பேரரசன் குலோத்துங்கனால் என்பது வரலாற்று உண்மை.

செப்பேடுகள்

செப்பேடுகள் வழி சோழர் வரலாறு - 1

மாரிராஜன்
சோழர் வரலாற்று ஆய்வு சங்கம்
காரைக்கால்

வரலற்றுத்தரவுகளை நமக்குத் தரும் ஆவணங்களில் கல்வெட்டுகளைப் போல செப்பேடுகளும் மிக முக்கியமானதாகும்.

ஒரு சில அவசியத் தகவல்களை செப்பேடுகள் மட்டுமே நமக்குத் தருகிறது.

வழக்கம் போல் ஒரு அரசனின் நில தானங்கள், கொடைகள், சலுகைகள், இதைக்குறித்த அரசனின் ஆணைகளை செம்புத் தகடுகளில் பொறிக்கப்பட்டு அவைகள் ஆவணங்களாக அறிவிக்கப்படும். இந்த செம்பு பட்டயங்களே செப்பேடுகள் எனப்படும்.

இந்த செப்பேடுகளில் தானம் குறித்த செய்தி பிரதானமாக அமைந்தாலும், மேலும் பல வரவாற்றுத் தகவல்களும் பதிவுசெய்யப்படுகிறது.

அரசனின் விபரம், அவனின் முன்னோர், அவனது வாரிசு விபரம், அவனது வெற்றி, இன்னும் பல விபரங்கள் அச் செப்பேட்டில் காணப்படுகிறது. இவ்விபரங்கள் மிகச்சிறந்த வரலாற்றுத் தரவுகளாக உள்ளன.

அரசன் வழங்கும் கொடையானது முடிவு செய்யப்பட்டு, அதன் விபரங்கள் ஒரு ஓலையில் எழுதப்படும். ஓலையில் எழுதப்பட்ட விபரங்களை அரசு உயர் அதிகாரிகள் சரிபார்ப்பார்கள். அதன் பிறகு ஓலையில் உள்ள விபரங்கள் செப்பேடுகளில் பொறிக்கப்படும்.

செம்பு கட்டிகளை உருக்கி அடித்து பட்டைகளாக செய்வார்கள். அதன் இலகுவான பரப்பின் மேல் விபரங்களை ஒரு பண்டிதர் எழுத்தால் எழுதுவார். அதன் பிறகு பட்டயங்கள் நன்கு காய்ந்த பிறகு எழுத்தின் மேல் உளி கொண்டு செதுக்கி செப்பேடுகள் முழுமையடையும். ஒவ்வொறு பட்டையத்திலும் எண்கள் இடப்படும்.

பட்டைகளின் ஓரத்திலோ, நடுவிலோ துளைகள் இடப்படும்.

இவ்வாறு எழுதப்பட்ட செப்பு பட்டயங்கள் ஒரு வளையத்தில் கோர்க்கப்படும். வளையத்தின் முகப்பில் அரசனது முத்திரையும் செம்பில் செதுக்கி இணைப்பார்கள்.

சேரர், சோழர், பாண்டியர், பல்லவர், மற்றும் பல சிற்றரசர்கள் ஏராளமான செப்பேடுகளை வெளியிட்டுள்ளனர்..

இவற்றில் சோழர் காலத்திய செப்பேடுகளில் காணப்படும் விபரங்களை அடுத்தடுத்த தொடர் பதிவுகளாக அறிய இருக்கிறோம்.



இதுவரை சோழர் காலத்திய செப்பேடுகளாக நமக்கு கிடைத்திருப்பவை..

1. உதயேந்திரம் செப்பேடு..
(முதல் பராந்தகச் சோழனால் வெளியிடப்பட்டது
கி.பி. 922)

2 வேலஞ்சேரிச் செப்பேடு.
(முதல் பராந்தகச் சோழனால் வெளியிடப்பட்டது.
கி.பி. 932)

3 அன்பில் செப்பேடு. (சுந்தரச் சோழனால் வெளியிடப்பட்டது
கி.பி 961.)

4 . திருச்செங்கோடு செப்பேடு. -
(இராசகேசரி. வெளியிடப்பட்டது.
கி.பி.961)

5 . திருச்செங்கோடு செப்பேடு - 2

6. சென்னை அருங்காட்சியகச் செப்பேடு.
(உத்தமச் சோழனால் வெளியிடப்பட்டது.
கி.பி. 986)

7. பெரிய லெய்டன் செப்பேடு.
(இராஜேந்திர சோழனால் வெளியிடப்பட்டது.
கி.பி. கி.பி. 1005)

8. திருவாலங்காட்டுச் செப்பேடு.
(இராஜேந்திர சோழனால் வெளியிடப்பட்டது.
கி.பி. 1018)

9. கரந்தைச் செப்பேடு.
(இராஜேந்திர சோழனால் வெளியிடப்பட்டது.
கி.பி. 1020)

10. திருக்களர்ச் செப்பேடுகள்
(இராஜேந்திர சோழனால் வெளியிடப்பட்டது.
கி.பி. 1030)

11. எசாலம் செப்பேடு.
(முதலாம் இராஜேந்திரன்.
கி.பி. 1037)

12 . திருக்களர் செப்பேடு. 2
(முதலாம் இராசாதிராசன்)

13. சாராலச் செப்பேடு.
(வீரராஜேந்திரன்.
கி.பி. 1069)

14.சிறிய லெய்டன் செப்பேடு.
(முதலாம் குலோத்துங்கசோழனால் வெளியிடப்பட்டது.
கி.பி. 1090)

15. திருக்களர்ச் செப்பேடு. - 3
(முதலாம் குலோத்துங்கன்.

கி.பி.1098)

16. திருக்களர்ச் செப்பேடுகள் - 4 (இரண்டாம் இராஜராஜன்.
கி.பி. 1164)

17. திருக்களர்ச் செப்பேடு. - 5
மூன்றாம் குலோத்துங்கன்.
கி.பி. 1207)

18. திருவிந்தளூர் செப்பேடு..
(இரண்டாம் இராஜேந்திரன்)
மேற்கண்ட செப்பேடுகள் தரும் விபரங்களை அடுத்தடுத்தப்பகுதியில் தொடர்வோம்..

நம் மண்ணின் மீன்கள்

ராமமூர்த்தி நாகராஜன்
பூதலூர்

சன்னக்கெண்டை / பனையேறிக் கெண்டை/ மரமேறிக் கெண்டை.

Common name: Climbing perch.

Scientific name: Anabas testudineus

"மின்னை நிகருமிடை மெல்லியரே மேனியது
சன்ன மீன் உண்டால் தளராதாம் முன்னைக்
கரப்பானும் புண்ணும் கடிய கபமும்போம்,
உரப்பாக நாளுமுரை."

- சித்தர் பாடல்.

சன்னக் கெண்டை மீனை உண்பவர்களின் மேனி தளர்ச்சியடையாமல், கட்டுக்குலையாமல் இருக்குமென்றும் தேகபலம் அதிகரிக்குமென்றும் கரப்பான், புண், கொடிய கபநோய்கள் போகுமென்றும் மேலுள்ள சித்தர் பாடல் விளக்குகிறது.

ஆதாரப் புத்தகம்..

மீன்கள் அன்றும் இன்றும்.

ச.பரிமளா

தஞ்சைத் தமிழ்ப்பல்கலை வெளியீடு.

பரவல்:

இந்தியா இலங்கை உள்ளிட்ட ஆசிய நாடுகளில் காணப்படும் உள்ளூர் நாட்டு ரக மீன்.

உணவு:

நீரில் வாழும் பூச்சிகள் மற்றும் தாவரங்கள் உள்ளிட்ட அனைத்தையும் உண்ணக்கூடியது.

வாழிடம்:

ஓடும் ஆறு மற்றும் வாய்க்கால் நீரில் பெரும்பாலும் இருப்பதில்லை. ஆறு மற்றும் வாய்க்கால் நீர் சென்று தேங்கி இருக்கும் குளம் குட்டைகளில் இம்மீன் இருக்கிறது. இது உப்பு நீரில் வளராத நன்னீர் மீன் இனம் ஆகும்.

அளவும் எடையும்:

அதிகபட்சமாக 25 செமீ நீளம் வளரக்கூடியது. எடையில் அதிகபட்சமாக 150 கிராம் எடை உள்ளது.

சுவாசம்:

நீரில் இருக்கும் போது வழக்கமான மீன்களைப் போல செவுள்களின் வழியாக சுவாசிக்கிறது. தரைக்கு வந்தவுடனும் அதனுள் இருக்கும் சிறப்பு சுவாச உறுப்பின் மூலம் பல மணி நேரங்கள் உயிரோடு இருக்கிறது.

நடக்கும் திறன்:

மற்ற மீன்களைப் போல அல்லாமல் முன் வயிற்றின் அடியில் காணப்படும் துடுப்பின் மூலம் சிறிது சிறிதாக நடந்து செல்கிறது.

தோற்றம்:

மற்ற மீன்களைப் போல் அல்லாமல் இது சற்று கோபமான மீன். இம் மீன் கோபமானால் பக்கவாட்டு முட்கள் சிலிர்த்துக் கூராக இருக்கும். தலையில் உள்ள செவுளிலும் முட்கள் இருக்கின்றன. இம்மீனின் அடிப்புறம் சற்று சிவந்துக் காணப்படுகின்றன.

முதிர் காலம்:

ஆண்டு முழுவதும் இம்மீன் கிடைப்பதில்லை. ஏப்ரல், மே மாதங்களில் மட்டுமே நீர்நிலைகள் வற்றும் போது இம்மீன் எங்கள் தஞ்சை மாவட்டம் பூதலூர் பகுதியில் கிடைக்கிறது.

உணவு:

அருமையான சுவை கொண்ட மீன். குழம்பு பழசாக பழசாக சுவை கூடிக்கொண்டே போகிறது. குழம்பு எவ்வளவு நேரம் கொதித்தாலும் கரையாமல் கல் போல இருக்கும். அவ்வளவு சீக்கிரம் கரைந்து விடாது.

வளர்ப்பு;

இது மிகவும் சிறிதாக பெயருக்கு ஏற்றாற்போல் சன்னமாக இருப்பதால் வளர்ப்பு மீனாக வளர்க்கப்படுவதில்லை. தானாக வளரக்கூடிய மீன் இனம்.

பனைமரம் ஏறுமா?

களவாணி திரைப்படத்தில் ஒரு பாடலில் இம்மீன் பனை மரத்தில் சிறிது ஏறி கீழே விழுவது போல் காட்சிப்படுத்தப்பட்டு இருக்கும்.

பொதுவாக மீன்களுக்கு நீரை எதிர்த்து நீந்தும் பண்பு உண்டு. மழைபெய்து பனைமரத்தில் மேல் இருந்து நீர் வழியும் போது அதை எதிர்த்து செல்வது போல தன் முன் அடியில் உள்ள துடுப்பைப் பயன்படுத்தி சிறிது மேல் ஏறி பின் கீழே விழுகிறது. இதனால் இம்மீன் பனையேறி மீன் மற்றும் மரமேறிக் கெண்டை என்று அழைக்கப்படுகிறது.


நீந்துவோம்....


HI-TEK


HI-TEK








HI-TEK







தலைப்பலிக் கொடுத்த இளவெண்மதி சூடினான்

அன்பு வந்தியத்தேவன்

நாகப்பட்டினம்

விழுப்புரம் மாவட்டம் திருக்கோவிலூர் வட்டம் அரகண்டநல்லூரில் ஒப்பொருவரிலாத ஆளுடையார் கோவிலில் நாட்டிய மண்டபம் ஒன்றுள்ளது. அதன் சுவரில் சுந்தர பாண்டியர் கல்வெட்டொன்றுள்ளது. அதில் ஒருவர் தலைப்பலிக் கொடுத்தத் தகவல்களைக் குறிப்பிடப்பட்டுள்ளது.

"கோமாறபன்மர் திரிபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீ சுந்தர பாண்டிய தேவற்கு யாண்டு பத்தாவது இந்தத் திருமண்டபம் தட்டோடு இட்ட இதுக்கு இவ்வாண்டை திருவைகாசித் திருநாளில் இவூர் தேவரடியாரில் பொந்நாண்டை மகன் இளவெண்மதி சூடினான் தலை அரிந்து கொள்ளுகையில் இவனுக்கு உதிரப்பட்டியாக எல்லைக்காலில் தென்னக்கோன் தரங்கில் குரம்பில் ஊரு ஆதிசண்டீசுர நாயனார்கு கொடுத்தருளின குழி ஐநூறும் இப்பற்றில் நாட்டவர் இவூரில் குடிப்பற்றில் குடுத்தக்குழி ஐநூறும் ஆகக்குழி ஆயிரமும் சந்திராதித்தவரையாக இவன்வழி உள்ளவர் அனுபவித்துக் கொள்ளக் கடவார்கள் பன்மாகேசுரலக்ஷை:-

இதுக்கு இலங்கணம் சொன்னவன் தாக்குத் (தாய்க்குத்?) தானே மணவாளன்".

மாறவர்ம சுந்தர பாண்டியரின் பத்தாவது ஆட்சியாண்டில் அரகண்டநல்லூர் ஒப்பொருவரிலாத நாயனார் கோவிலில் மண்டபம் கட்டும் போது ஒவ்வொரு முறையும் இடிந்து விழுந்தது. இதைக் கண்ட இக்கோவில் பொன்னாண்டை என்ற தேவராடியாரின் மகன் இளவெண்மதி சூடினான் என்பவர் இறைவனிடம் மண்டபம் முழுதாக இடியாமல் கட்டிமுடிக்கப்பட்டால் தன் தலையைத் தானே அரிந்து அதாவது தலைப்பலிக் கொடுப்பதாக உறுதிக் கொண்டார். மண்டபம் இடியாமல் முழுவதும் கட்டிமுடிக்கப்பட்டது. சொன்னது போல் தேவரடியாரின் மகன் வைகாசித் திருநாளில்

தலைப்பலிக் கொடுத்தார். இவருக்கு உதிரப்பட்டியாக 1000 குழி நிலம் தானமாகக் கொடுத்து இவரது உறவினர்கள் அதை அனுபவித்துக் கொள்ள அனுமதி வழங்கப்பட்டது.

இதில் சிறப்பம்சம் என்னவென்றால் திருஞானசம்பந்தர் பாடிய கோவிலில் இதும் ஒன்று

"பீடினாற்பெரி யோர்களும்

பேதைமைகெடத் தீதிலா

வீடினாலுயர்ந் தார்களும்

வீடிலாரிள வெண்மதி

சூடினார்மறை பாடினார்

சுடலைநீறணிந் தாரழல்

ஆடினார் அறையணி

நல்லூர் அங்கையால்தொழுவார்களே"

என்று பாடினார். இதில் "வெண்மதி சூடினார்" என்று இறைவனைக் கூறுகிறார் திருஞானசம்பந்தர். அதே பெயரில் ஆறு நூற்றாண்டுகள் கழித்து "இளவெண்மதி சூடினான்" என்பவர் இக்கோவில் கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது சிறப்பே.





கோயிற் கட்டிடக்கலை

விஜய் பட்
சென்னை

1.0 விமானம்:

கருவறையின் பிரஸ்தர மேல் மட்டத்திலிருந்து சிகரத்துடன் கூடியதாகவும் , ஒன்று அல்லது அதற்க்கு மேற்பட்ட தளங்களையுடையதாகவும் கட்டப்பெறும் கட்டடத்திற்கு விமானம் என்று பெயர் .கருவறையின் அடி முதல் ஸ்துபி வரையுள்ள அமைப்பு விமானம் ஆகும்.

கட்டிடக்கலை பாணி: நாகர, திராவிட ,வேசரம் விமானங்கள்



Figure 1 Nagara Vesara Dravida Style

இமயம் முதல் விந்தியம் வரை உள்ளிட்ட பகுதியை "நாகரம்" என்றும்.

விந்தியம் முதல் கிருஷ்ணா வரை உள்ளிட்ட பகுதியை "வேசரம்" என்றும்.

கிருஷ்ணா முதல் குமாரி வரை உள்ளிட்ட பகுதியை "திராவிடம்" என்று கட்டிட கலை பாணியை பிரித்தனர்.

1.2 ஆலய புருஷ தத்துவம்:

Temple as body of the deity

ஆலயமானது விராட்புருஷனின் விஸ்வரூப வடிவமாகத்திகழ்கிறது.

அதன் உப்பீடமானது ஆலய புருஷனின் சரணாகாரமாகவும் (பாதங்களாகவும்)

அதிஷ்டான வர்க்கம் கால்முட்டிப் பகுதியாகவும்

பாத வர்க்கம் (தூண்) கைகளாகவும்

பிரஸ்தரம் தோள்பட்டையாகவும் (புஜம்)

கண்டம் கழுத்துப் பகுதியாகவும்

சிகரம் முகமாகவும்

உஷ்ணீஷம் (ஸ்துபம்) சிகையாகவும் மஹாநாசி மூக்காகவும் விளங்குகிறது



Figure 2.ஆலய புருஷ தத்துவம்

1.3ஆலய புருஷ தத்துவம் (Temple as body of the deity):

கோயிலின் அமைப்பை ஒரு ஆணின் (விராட்புருஷனின்)வடிவத்தை கிடந்த கோலம் என்று ஆகம நூல்கள் கூறுகின்றன.

அவ்வாறே மனித உடலின் ஆறு ஆதாரங்களை போல் கோவிலின் மண்டபங்கள் ஆதார ஸ்வரூபமாக விளங்குகின்றன

கருவறை - ஆஞ்ஞை (புருவ நடுவிடம்)

அர்த்த மண்டபம் - விஷுத்தி (கழுத்து)

மஹா மண்டபம் - அனாகதம் (இதயம்)

ஸ்தபன மண்டபம் - மணிபூரகம்

அலங்கார மண்டபம் - ஸ்வாதிஷ்டானம்

சபா மண்டபம் - மூலாதாரம்




Figure 3 ஆலய புருஷ தத்துவம்

2.0 விமானத்தின் உறுப்புகள்:

Figure 4 விமானத்தின் உறுப்புகள்




Figure 5 விமானத்தின் உறுப்புகள் 1.1



பாதாமியும் விநாயகரும்

ஸ்ரீநிவாஸ்
வேலூர்

கர்நாடகாவில் உள்ள பாகல்கோட் மாவட்டத்தில் உள்ள ஓர் அழகிய ஊர் தான் பதாமி, ஆனால் பொது ஆண்டு ஆறாம் நூற்றாண்டு தொடங்கி எட்டாம் நூற்றாண்டு வரை பதாமி சாளுக்கியர்களின் தலைநகரமாக விளங்கியது வாதாபி.

நம் தமிழ்நாட்டு வரலாறு உடன் ஓர் நெருங்கிய தொடர்புகொண்ட நகரம் தான் வாதாபி, 7ஆம் நூற்றாண்டில் சாளுக்கிய அரசன் இரண்டாம் புலிகேசி அன்றைய பல்லவர்களின் தலைநகரமாக விளங்கிய காஞ்சிபுரம் மீது படையெடுத்து வந்து பல்லவ மன்னன்முதலாம் மகேந்திரவர்மன் உடன் போர் புரிந்தார் புலிகேசி, இந்த பல்லவ சாளுக்கிய போர்களில் பல்லவ சாளுக்கிய படைகள் வெற்றி தோல்விகளை பரிமாற்றம் செய்துகொண்டு மகேந்திரவர்மனின் மகன் முதலாம் நரசிம்மவர்மன் காலத்திலும் பல்லவ சாளுக்கிய போர்கள் தொடர்ந்து நடைபெற்றன.

முதலாம் நரசிம்ம வர்மன் பொ ஆ 641ல் புலிகேசியை வென்று வாதாபிகொண்ட நரசிங்கபோத்தரையன் என்ற பட்டபெயரும் பெற்று, பல்லவர்களின் வெற்றிக்கு சான்றாக ஜெயஸ்தம்பம் வெற்றி தூண் ஒன்றை வாதாபியில் பதிக்கிறார் நரசிம்மவர்மன், இப்போரில் பல்லவ படைகளுக்கு தளபதியாக விளங்கியவர் பரஞ்சோதி.

பரஞ்சோதி வாதாபியிலிருந்து ஓர் கணபதி சிலையை கொண்டுவந்ததாக பிரதிஷ்டை செய்த கணபதியை வாதாபி கணபதி என்று அழைத்தனர், வாதாபி கணபதியை நாகப்பட்டினம் மாவட்டத்தில் உள்ள, திருச்செங்காட்டாங்குடி ஊரில் உள்ள உத்திராபசுபதீஸ்வரர் சிவன் கோவிலில் கணபதி சிலையை பிரதிஷ்டை செய்த பிறகு பரஞ்சோதி சிறுத்தொண்டர் என்ற பெயரில் சிவன் அடியார்களுக்கு சேவை செய்து சிறுதொண்டர் நாயன்மாராக விளங்கினார் பரஞ்சோதி.

வாதாபி கணபதி வருகைக்கு பின்னரே தமிழகத்தில் கணபதி வழிபாடு தொடங்கியது என்ற கருத்தும் பல காலமாகக நிலவி வந்தது.பிள்ளையார்பட்டி குடைவரை

ஆலக்கிராமம் கணபதி கல்வெட்டு பல்லவர் காலத்திற்கு முன்பே தமிழ்நாட்டில் ணபதி வழிபாடு முறை தமிழகத்தில் இருந்தது என்பதற்கு சான்றாக அமைந்தது.

வாதாபி கணபதி பற்றிய பெரியபுராணதில் சிறுதொண்டர் புராணத்தில் பாடல் குறிப்புகள் உண்டு

"மன்னவர்க்குத் தண்டு போய் வடபுலத்து வாதாவித்

தொன் நகரம் துகள் ஆகத் துளைநெடும் கை வரை உகைத்துப்

பன் மணியும் நிதிக் குவையும் பகட்டு இனமும் பரித் தொகையும்

இன்னை எண் இல கவர்ந்தே இகல் அரசன் முன் கொணர்ந்தார்."

அரசனுக்காகப் படையெடுத்துச் சென்று வடபுலத்திலே வாதாவி என்னும் பழைய நகரத்தை தூளாக இடிபடும்படி; துளை நெடுங்கை வரை உகைத்து - யானைப்படையினைச் செலுத்தி வென்று; பன்மணியும்.. முன் கொணர்ந்தார் - பல மணிகளையும் இன்னும் இவ்வாறான எண்ணில்லாதனவற்றையும் கைக்கொண்டு இவ்விடத்துத் தமது அரசன் முன் கொண்டு வந்தார்

இப்பாடலின் வழியே வாதாபி நகரத்திலிருந்து விலை உயர்ந்த மணிகளை கொண்டுவந்தார் என்ற செய்தி உள்ளதே தவிர கணபதி சிலையை கொண்டுவந்தார் என்ற தகவல் இல்லை.

"மன்னவனை விடை கொண்டு தம்பதியில் வந்து அடைந்து

பன்னு புகழ்ப் பரஞ் சோதியார் தாமும் பனி மதி வாழ்

சென்னியரைக் கணபதி ஈச்சரத்து இறைஞ்சித் திருத்தொண்டு

முன்னை நிலைமையில் வழுவா முறை அன்பில் செய்கின்றார்"

மன்னவனை அடைந்து - அரசனை விடை கொண்டு தமது பதியின்கண் வந்து சேர்ந்து; பன்னும்....இறைஞ்சி - எடுத்துச் சொல்லப் பெறும் புகழினையுடைய பரஞ்சோதியாரும் குளிர்ச்சியுடைய சந்திரனைச் சூடிய சிரத்தினை உடைய இறைவரைக் கணபதீச்சரத்திலே வணங்கி; திருத்தொண்டு....செய்கின்றார் -

திருத்தொண்டினை முன்னை நிலைமையினின்றும் வழுவாமல் முறைப்படி அன்பினாற் செய்கின்றார்.

திருச்செங்காட்டாங்குடியில் உள்ள கணபதீச்சரம் என்ற கோவிலில் தான் வாதாபி கணபதியை பிரதிஷ்டை செய்து வணங்கினார் பரஞ்சோதி என்ற செவிவழி செய்தியை நாம் அறிவோம், வாதாபி கணபதி குறித்து கல்வெட்டுகளோ பல்லவர் கால செப்பேடுகள் வழியே நமக்கு எந்த தகவல் ஏதும் நமக்கு கிடைப்பதில்லை மேலும் கணபதீச்சரம் கோவில் பரஞ்சோதி தான் கட்டியது என்பதற்கும் கல்வெட்டுகள் ஏதும் கிடைப்பதில்லை.

கணபதீச்சரம் கணபதி சிலை சோழர் பாணியில் வடிக்கப்பட்டுள்ளது என்று கருத்தும் உண்டு அதேபோன்று திருவாரூரிலும் ஒரு கணபதி சிற்பம் உள்ளது. அச்சிற்பம் தொன்மையானதாகவும், சாளுக்கிய கலை பாணியிலும் அமைந்துள்ளதாக எனவே இதுவே வாதாபியை வென்றுக் கொண்டு வரப்பட்ட கணபதியாக இருக்கலாமென சில வரலாற்று ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

முதலில் பல்லவர் சாளுக்கியர் காலத்தில் இறை உருவங்களை கொணர்ந்து வரும் முறை இருந்ததா என்று நாம் சிந்திக்க வேண்டும் ஏனென்றால் மகேந்திரவர்மன் நரசிம்ம வர்மன் பரமேஸ்வரவரம்ன் இராஜசிம்மன் இரண்டாம் நந்திவரம்ன் வரை பல்லவர்கள் தொடர்ச்சியாக போர் புரிந்து வெற்றி கண்டுள்ளனர், சாளுக்கிய சிற்பங்கள் ஏதும் பல்லவ தேசத்தில் நமக்கு காண கிடைப்பதில்லை.

இரண்டாம் விக்ரமாத்தியன் பல்லவர்களை எதிர்த்து போரில் வென்று கட்வாங்கம், ரிஷபலஞ்சன சமுத்திராகோஷா கொணர்ந்து மற்ற செல்வங்களை மீண்டும் காஞ்சிபுரம் கைலாசநாதர் கோவிலுக்கு நிவந்தமாக வழங்கிய கல்வெட்டும் உள்ளது., வாதாபி போர் பல்லவ வரலாற்றில் நடந்த மிகமுக்கியமான போர் ஆகும் பல்லவ செப்பேடுகள் நரசிம்மவர்மன் உடைய வெற்றி தூண் பற்றிய செய்திகளை தருகிறதே தவிர வாதாபியிலருந்து கணபதி சிற்பம் கொண்டுவந்த செய்திபற்றி செப்பேடு செய்தி ஏதுமில்லை

தமிழக வரலாற்றில் குறிப்பாக சோழர் காலத்தில் தான் இறை உருவங்களை கொணர்ந்து வரும் செய்தி நமக்கு கிடைக்கின்றன.

பதாமி கோட்டையில் வாதாபி கணபதி இருந்ததாக நம்பபடும் கோவில் உள்ளது இந்த கோவிலுக்கு அருகே உடைந்த நிலையில் சாளுக்கியர் கலைப்பணியில்

உள்ள கணபதி சிலையும் உள்ளது,, இந்த கணபதி சிலை தான் வாதாபி கணபதி சிலையா? கட்டிட கலையில் சிறந்து விளங்கும் ஆய்வாளர்கள் சாளுக்கிய கால கணபதி சிற்பங்களையும் ஒப்பிட்டு திருச்செங்காட்டாங்குடியில் திருவாரூர் வாதாபி கணபதியை பற்றி ஆய்வுகள் மேற்கொண்டால் நல்ல உறுதியான முடிவுகள் நமக்கு கிடைக்கும்.

இதோ புகைபடத்தில் நீங்கள் காணும் கணபதி சிலையை நூற்றாண்டுகளுக்கு முன்னர் முதலாம் நரசிம்மவர்மன் பல்லவ வீரர்கள் பரஞ்சோதி ஆகியோர் இந்த கணபதியை நேரில் கண்டு இருப்பார்கள், எண்ணற்ற சாளுக்கிய வீரர்கள் இந்த கணபதியை வணங்கி இருப்பார்கள், காலம் அனைத்தையும் மாற்றிவிடும் என்பதை போல இன்று இந்த கணபதி ஓர் நீண்ட வரலாறை சுமந்து, அமைதியாக பதாமி கோட்டையில் அமர்ந்து கொண்டு நமக்கு தரிசனம் தருகிறார்...

சுனை உள்ளதாக அரசு ஆவணம் சொல்கிறது. ஆனால், அது மழை நீர்த் தேக்கம் போல்தான் தெரிகிறது. அதன் மேல் விதானத்திலும் சில ஓவியங்கள் உள்ளன.

சில டிப்ஸ்:

இந்தக் குன்றின் மேலே செல்வது ஒன்றும் கடினம் இல்லை என்றாலும் கூட, ஒரே ஒரு இடத்தில் மட்டும் இரண்டு குன்றுகளை இணைக்க நமது அரசாங்கம் ஒரு இரும்பு ஏணிப்படியை போட்டு வைத்திருக்கிறது. அதில் கைப்பிடி இல்லாதலால், கொஞ்சம் ஜாக்கிரதையாய் ஏறி இறங்க வேண்டும்.

மற்ற சில இடங்களில் அழகான படிகளும் உள்ளன.

இந்த இடத்திற்கு தனியே செல்ல உங்களுக்குத் தயக்கமாக இருப்பின், மதுரை ஒத்தக்கடையைச் சேர்ந்த திரு.ரவிச்சந்திரன் என்பவரை அழைத்தால், அவர் மகிழ்ச்சியுடன் உங்களை அழைத்துச் செல்வார்.

அவர்தான் யானைமலை கல்வெட்டு இருக்கும் இடத்திற்கு செக்யூரிட்டி. அதனால், யானைமலையையும் சேர்த்தே காண்பித்து விடுவார்.

அவருடைய மொபைல் எண் : 8428412774 / 7092400566

இந்தக் கல்வெட்டுக்கள் இருக்கும் இடம் ஒரு அத்துவான காடு. எனவே, தண்ணீர், சாப்பாடு, பிஸ்கட் கைவசம் வைத்திருக்கவும்.

இந்த இடத்தில் கள்வர்களின் (அ) சமூக விரோதிகளின் நடமாட்டம் உள்ளதாக சொல்லப்படுகிறது. அதை நிரூபிக்கும் விதமாக ஏராளமான மது பாட்டில்களும், இறைச்சிகளை சமைத்த தடமும் உள்ளன. எனவே, இங்கு தனியே செல்வதைத் தவிர்க்கவும்.

நன்றிகள்

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை வெளியிட்ட “ தமிழ்-பிராமி கல்வெட்டுகள் ” ஆவணம்.

உயர்திரு ராஜகுரு அவர்கள்

தம்பி திருச்சி பார்த்தி மற்றும் நண்பர் உயர்திரு. பாலாபாரதி

பேராசிரியர் க. நெடுஞ்செழியனின் ஆசீவகமும் ஐயனார் வரலாறும்





தொண்டை மண்டலமும் பிரம்ம சாத்தனும்

"சிவத்தமிழ்ச் செல்வர்"

பி.திருச்சிற்றம்பலம் M.Sc.,M.A.,DIAE.,DCT.,

திருவாவடுதுறை ஆதீனப்பேராசிரியர் - சென்னை

கல்தோன்றி மண்தோன்றா காலத்தே வாளொடு முன்தோன்றிய மூத்த குடியாகிய நம் தமிழர் மரபில் தமிழின் வடிவமாகவும் தமிழ்க்கடவுளாகவும் முருகனையே அடையாளப்படுத்தி சிறப்பித்துக் கொள்வோம்.

முத்தமிழ்க் குமரனின் வடிவம், அழகு ,புகழ் , வீரம், பண்பு, அருள்புரியும் தன்மை , வழிபடும் இடங்கள் , வழிபட்டோர், வழிபட்ட முறை என ஒவ்வொன்றை பற்றியும் விரிவாக நம் தொல்காப்பியம் முதற்கொண்டு சங்க இலக்கியங்கள் பரவலாகத் தெரிவிக்கின்றன. சங்க காலத்தே காடு, சோலை, துருத்தி என்னும் ஆற்றிடைக்குறை, ஆறு ,குளம் ,சதுக்கம், சந்திகள், கடம்பமரம்,

மன்றம், பொதியில், கந்து உள்ளிட்ட இடங்களில் ஆண்டலைக்கொடியை நிறுவி வேலன் வெறியாட்டம் நிகழ்த்தி வழிபட்ட நம் முன்னோர்கள் வேலையே முதன்மையாக அமைத்து வேல்கோட்டங்கள் பல எடுப்பித்து வணங்கியதை சிலப்பதிகாரத்திலும் மாமல்லபுரம் - சாளுவன்குப்ப அகழ்வாய்வில் வெளிப்பட்ட கோயிலிலும் காணலாம்.

காலங்கள் பல உருண்டோடி முருகனை சிலை வடிவில் வழிபட எண்ணம் கொண்டவர்கள் அர்ச்சா மூர்த்தங்கள் எனப்படும் கருங்கல்லினால் ஆன திருவுருவை பாறைகளில் குடைவித்தும் பலகைக் கற்களில் வடித்தும் கட்டுமானக் கோயில்களில் சிலைகளாக நிறுவியும் வணங்கிய முறையினை தமிழக வரலாற்றில் அறியப்பெறுகிறோம். குறிப்பாக பல்லவர் காலத்தில் தான் இவ்வழக்கத்தை காண்கிறோம். அவற்றோடு சிவன்,திருமால்,, கொற்றவை, தவ்வை,சப்தமாதர்கள் உள்ளிட்ட ஏனைய கடவுளுக்கான முதற் கருங்கல் சிற்பங்களும் பல்லவர் கால

கலைப்பாணியோடு பல்லவர் ஆண்ட தொண்டைமண்டலப் பகுதியிலேயே கிடைப்பது குறிப்பிடத்தக்கது.

சுதை, சுடுமண், மரம் மற்றும் வண்ண ஓவியமாக வழிபட்ட காலம் மாறி அழியாத கலைப் படைப்பாக என்றும் திகழ பல்லவர்கள் கல்லையே தேர்ந்தெடுத்துள்ளனர்.

அவ்வகையில் முருகக் கடவுளின் உருவ வழிபாட்டிற்காக பிரம்ம சாத்தன் என்னும் பிரம்ம சாஸ்தா வடிவத்தை பல்லவர் காலத்தில் பயன்படுத்தத் துவங்கியதாக அறிகிறோம். இவ்வடிவம் பிரணவத்தின் பொருளறியாத நான்முகனை தண்டித்தவராய் படைப்புத் தொழிலை தாமே ஏற்று ஆற்றத் திருவுள்ளம் கொண்டவராய் முருகப்பெருமானே நாற்கரங்களில் மேலிரு கரங்களில் அக்கமாலை என்னும் ஜெபமாலையையும் குண்டிகை என்னும் கமண்டலத்தையும் ஏந்தி கீழிரு கரங்கள் அபயம் மற்றும் தொடை மீது ஊன்றிய நிலையிலுமாகக் காட்சிதருவார். இக்காரணம் கொண்டே இவ்வடிவை பிரம்ம சாத்தன் என்பர்.

பல்லவர் தம் கலைக்கருவூலமாகத் திகழும் கடல்மல்லையில் முதலாம் நரசிம்மவர்மனும் (பொ.யு. 630-668) ஒற்றைக்கல் தளிகள் எனப்படும்

ஐந்து இரதங்களில் ஒன்றான தர்மராஜர் இரதத்தின் கோட்ட சிற்பமாக பிரம்ம சாஸ்தாவையே முருகனாக இடம்பெறச் செய்துள்ளார்.

கிடைக்கும் சிற்பங்களில் இச்சிற்பமே பிரம்ம சாஸ்தாவிற்கான முதல்வடிவமாகும்.

குடவரைகள் குடைவித்த மகேந்திரவர்மனின் மகனாகிய முதலாம் நரசிம்ம வர்மனின் காலம் முதல் பத்தாம் நூற்றாண்டு வரை சோழர் காலத்திலும் இவ்வடிவம் அமைக்கும் மரபு தொடர்ந்துள்ளது. அதன் பின் வந்த சோழ அரசர்கள் முருகனின் ஏனைய வடிவங்களின் மீது கவனம் செலுத்த துவங்கியதால் பிரம்ம சாஸ்தாவை வடிவமைக்கும் வழக்கம் முற்றிலும் குறைந்துவிட்டது. இருப்பினும் நாயக்கர் காலத்திலும் தொடரப்பட்டுள்ளதை ஒரு சில இடங்களில் மூலமாக அரிய முடிகிறது.

தமிழகத்தின் தொண்டைமண்டலத்திற்கே உரிய முருகனின் சிறப்பு வாய்ந்த வடிவமாக தொண்டைமண்டலத்தில் மட்டுமே காணக்கிடைக்கிறார் பிரம்ம சாத்தன் என்னும் பிரம்ம சாஸ்தா.



சோழர்கால பிரம்ம சாத்தன் - ஆனூர்



பிரம்ம சாஸ்தாவிற்கான பல்லவர்கால முதற்சிற்பம்

[மாமல்லபுரம் - ஐந்து ரதம்]

திருச்சிராப்பள்ளி மலைக்கோட்டையின் சொல்லப்படாத வரலாறு

அரிஷ்டோ

வரலாற்றுத்துறை மாணவர்

பிஷப் ஹீபர் கல்லூரி

திருச்சிராப்பள்ளி

பங்குனி ஒன்றன்று மலைக்கோட்டையில் ஒரு மாலை இளவெயில் நேரத்தில் மலையை சுற்றி நடைபயணம் தொடங்கியது.

பிறகு மலைக்கு பின்புறமாக சென்றேன் அங்குள்ளவர்களிடம் வழியை கேட்டு ஒருவர் வழிகாட்ட அவர்ப்பின்னே சென்றோன் அங்கு மலைக்கு மேல் நிறைய பாதியிலே முடிந்த படிக்கட்டுகள் உள்ளதாக அவர் சொல்லிக்கொண்டே அந்த இடத்திற்கு அழைத்துச்சென்றார் அது சிறிது கடினமான பாதை... அங்கு சென்று பார்த்தால் நிறைய படிக்கட்டுகள் இருந்தன இவை இங்கு இருக்க காரணம். இந்த மலைக்கோட்டை முன்பொருகாலத்தில் சமண பள்ளியாக இருந்தது. சமணம் இங்கு செழித்தோங்கி வளர்த்தது, சில சமண படுகைகளும் இலைகள் மூடி பார்ப்பதற்கு இயலாதவண்ணம் இருந்தது. சமணபள்ளி எப்படி சிவன் மற்றும் பிள்ளையார் கோவிலாக மாறியது ? முதலாம் மகேந்திரவர்மன் ஆரம்பகாலத்தில் சமண மதத்தை பின்பற்றி வந்தான் பிறகு 63 நாயன்மார்களுள் ஒருவரான அப்பரால் ஈர்க்கப்பட்டு சைவ சமயத்திற்கு மாறினான் அதன்பிறகுதான் அங்கிருந்த சமணபள்ளியை அகற்றிவிட்டு சிவன் கோவிலை கட்டினான். ஆதலால்தான் அங்கு இன்றும் எஞ்சியுள்ள சமணப்படுக்கைகளும் சில படிகட்டுகளும் காணப்படுகின்றன.

மேலும் இப்பாறைச்சரிவில் ஒரு சிற்பம் உள்ளது.

இந்த சிற்பத்திலுள்ள உருவம் புத்தரும் அல்ல மகாவீரரும் அல்ல இது குருமருளதேவர் என்னும் ஒரு துறவியின் சிற்பம். இந்த சிற்பதையடுத்து ஒரு கல்வெட்டும் அதன் மேல் இரண்டு பாதங்களின் புடைப்பு சிற்பமும்

வடிக்கப்பட்டுள்ளது. அந்த கல்வெட்டுச்செய்தி படிப்போரை அச்சுறுத்தும் வகையில் உள்ளது. என்ன செய்தி அது ?

ஸ்வஸ்திஸ்ரீ - வீர சோமிசுர தேயனும் குறுநிலம் ந - மவங்கி சத்தாரோடே நடப்பார்களாகில் எந்சொற்படி உண்டாகி

- க - றருதாருண்டாகில் - ஸ்ரீகுருநாதனாகிலு ஸ்ரீமாகேசுவர ராகிலும் எந் சொற்படி அந்றி தாங்கள் திறந்தார்களாகில் தங்களாணை ஸி

த்த ரா - ஆணை ஸ்ரீகுருமருள் தேவர் ஸ்ரீ பாதம் அல்லது அறியேந் பிரதி

ழ்டை பண்ணினால் வல்ல வென்ந ஒணாது மண்ணுக்கு பொற்றுக்கு புக்க

தல்ல இவை இச்சித்துப் புக்கேனாகில் ஸ்ரீகுருனாதனுக்கும்

சுத்து துவ்கும் துரோகி ஸித்தி வேண்டி - முங்கழித்தால்


திறக்க

பொருள்:


இந்த குருமருளதேவர் பொன்மீதோ , மண்மீதோ ஆசையற்றவர், இவரின் ஒரே நோக்கம் இறைநிலையடைதல் (spiritual awakening) ஆதலால் தன் சீடனிடம், தான் ஒரு நிலவரைக்குள் போய் தவம் செய்யப்போவதாகவும் அந்த அறையை என் குருநாதர் வந்தாலும் அந்த மகேஸ்வரனே வந்தாலும் எக்காரணம்கொண்டும் திறக்கக்கூடாது. மீறி திறந்தால் அவர்கள் சபிக்கப்படுவார்கள் என்று சொல்வதுபோல் இந்த கல்வெட்டு வடிக்கப்பட்டுள்ளது.

மலைக்கோட்டையின் மேற்கு பக்கம் ஒரு இயற்கையாய் அமைந்த குகை போன்ற அமைப்பு உள்ளது. அதில் கி.பி 3 ஆம் நுற்றாண்டைச்சேர்ந்த தமிழி கல்வெட்டு ஒன்று 1937 ஆம் ஆண்டு பிரிட்டிஷ் ஆய்வாளர்களால் கண்டுபிடிக்கப்பட்டது. அதற்கு பிறகு அந்த கல்வெட்டை யாருமே பார்த்தது இல்லை. நானும் 4 முறை முயற்சித்தும் அந்த இடத்திற்கு செல்லமுடியவில்லை, ஏனென்றல் மிகவும் கடினமான வழியில் தான் செல்லவேண்டும் மற்றும் அதற்கு அனுமதியும் இல்லை.

கல்வெட்டுச்செய்தியும் பல ஆய்வாளர்களின் கருத்தில் மாறுபடுகிறது ஆதலால் அதில் என்ன செய்தி உள்ளது என்று தெளிவாக தெரியவில்லை.







கன்னல் சுவை சங்கத்தமிழ்

பௌசியா இக்பால்

சத்தியமங்கலம்

அனைவருக்கும் வணக்கம்! ஆற்றுப்படை வெளியிடும் மின்இதழின் வாயிலாக உங்கள் அனைவரையும் சந்திப்பதில் மகிழ்ச்சி. அதிலும் குறிப்பாக நம் முன்னோர்கள் வழங்கிச் சென்ற சங்கஇலக்கியங்கள் வாயிலாக அன்றைய மக்களின் வாழ்வியலைப் பற்றிய செய்திகளுடன் உங்கள் அனைவரையும் சந்திப்பதில் பெருமகிழ்ச்சியே.

இதைப் படித்ததும், 'சங்க இலக்கியங்களைப் பற்றிப் பேசுவதில் அப்படி என்ன இன்பம்? பழம் இலக்கியங்களைப் பற்றித் தெரிந்து கொண்டு என்ன ஆகப்போகின்றது' என்ற கேள்வி யாருக்கேனும் தோன்றியிருந்தால் அவர்களுக்கான பதில், சங்க இலக்கியங்கள் வரலாற்று ஆய்வாளர்களின் ஆய்வுகளை மெய்ப்பிக்கும் இலக்கியச் சான்றுகள்.

இதில் காதல், வீரம், நட்பு, அறம், வீடுபேறு, இயற்கையோடு ஒன்றிய வாழ்வியல் என அனைத்துமே உள்ளது. உதாரணமாக "வீரம்" இந்த தலைப்பில் புலவர்கள் தாங்கள் யாரைப்பற்றி பாடுகிறார்களோ, அத்தலைவனின் வீரத்தை மட்டும் பெரிதாக பேசாமல், அவனை எதிர்க்கத் துணித்தவனின் வீரத்தையும் மேற்கோள்காட்டி, இத்தகையவனை இவன் இவ்வாறு எதிர்த்து நின்றான்" என்று கூறி, தன் எதிரிகளும் தனக்கு இணையான வீரம் நிறைந்தவர்கள் என்பதை எத்தகைய தயக்கமுமின்றி குறிப்பிட்டவர்கள் நம் முன்னோர்கள்.

பழமை வாய்ந்த இவ்விலக்கிய நூல்களை பதினெண்மேல்கணக்கு நூல்கள் என்றும், பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் என்றும் வகைப்படுத்தினர். இவ்வகைப்பாடு பாடல்களின் அளவைப் பொறுத்தே பிரிக்கப்பட்டுள்ளது என்பதனை நாம் தெளிவாக புரிந்துகொள்ளவேண்டும். இவற்றில் பதினெண்மேல்கணக்கு நூல்கள் எனப்படும் பதினெட்டு நூல்களும் அளவில் பெரியது. இவையே தொகை நூல்கள் என்றும் வழங்கப்படுகிறது. இதனை "பாட்டும் தொகையும்" என்பார்கள். இதில் பாட்டு என்பது பத்துப்பாட்டையும், தொகை என்பது எட்டுத்தொகையையும்

குறிக்கிறது. பத்துப்பாட்டில் உள்ள பத்து பாடல்களும், எட்டுத்தொகையில் உள்ள எட்டு பாடல்களும் தற்போது நமக்கு ஒரே தொகுப்பாக கிடைத்தாலும், இவை எழுதப்பட்ட காலமும், இப்பாடல்களை இயற்றிய புலவர்கள் ஒருவருக்கொருவர் தொடர்பின்றியுமே உள்ளனர்.

இவைதான் பத்துப்பாட்டு பாடல்கள் என்பதற்கும், இவை இவை எட்டுத்தொகை நூல்கள் என்பதற்கும் தனித்தனி வெண்பாக்களே உண்டு...

சங்கத் தமிழர்களின் அடிப்படை வாழ்வியலான, மிகுந்த அன்பு அகமாகவும், வீறுகொண்டெழும் பெரும் வீரம் புறமாகவும் கொண்டே தொகை நூல்கள் எழுதப்பட்டுள்ளன. தொகை நூல்களுக்கான பொதுவான அறிமுகம் போதுமென்று எண்ணுகிறேன். வாருங்கள் இன்று எட்டுத்தொகை நூல்களில் ஒன்றான குறுந்தொகையில் வரும் 277-வது பாடலைப் பற்றி அறிவோம்.

இப்பாடலைத் தேர்ந்தெடுத்ததன் காரணம் இது மார்கழி மாதம் என்பதே. மார்கழி மற்றும் தை மாதங்கள் முன்பனிக்காலம் என்று சங்ககால மக்களால் பிரிக்கப்பட்டுள்ளதை நாம் அனைவரும் அறிவோம். கடுங்குளிர் ஊசியாய்த் துளைக்கும் இந்த முன்பனிக்காலத்தைப் பற்றி இப்பாடல் என்ன கூறுகின்றது? வாருங்கள் தெரிந்து கொள்வோம்.

இப்பாடலைப் பாடியவர் ஓரிற் பிச்சையார் எனும் புலவர். சங்க இலக்கியத்தில் இவரின் இந்த ஒருபாடல் மட்டுமே காணப்படுகிறது.

திணை: பாலை.

கூற்று விளக்கம்: தலைவன் முன்பனிக்காலத்தில் வருவதாகக் கூறிசென்றான். ”முன்பனிக் காலம் எப்பொழுது வரும்?” என்று தோழி அறிவரைக் கேட்கிறாள்.

“ஆசில் தெருவில் நாயில் வியன்கடைச்
செந்நெல் அமலை வெண்மை வெள்ளிழுது
ஓரிற் பிச்சை ஆர மாந்தி
அற்சிர வெய்ய வெப்பத் தண்ணீர்
சேமச் செப்பிற் பெறீஇயரோ நீயே
மின்னிடை நடுங்கும் கடைப்பெயல் வாடை

எக்கால் வருவ தென்றி
அக்கால் வருவரெங் காத லோரே”

பாடல் விளக்கம் :

சங்ககாலத்தில் வாழ்ந்திருந்த தலைவி ஒருத்தியை, தலைவன் பிரிந்து சென்றுவிட்டான். “நான் மீண்டும் முன்பனிக்காலத்தில் வந்து உன்னைச் சந்திக்கிறேன்” என்றுக் கூறிச்சென்றவன் நீண்ட நாட்கள் ஆகியும் வரவில்லை. வருவேனென்று கூறிச் சென்ற தலைவனைப் பிரிந்த சோகத்தால் தலைவி களையிழந்து காணப்படுகின்றாள். அவளைப் பார்த்த தோழிக்கோ தலைவியின் இந்நிலை மிகுந்த வேதனையை உண்டுபண்ணுகிறது.

(இன்று போல அன்றும் தகவல்தொடர்பு ஊடகங்கள் இருந்திருந்தால் இதுபோன்ற அமர இலக்கியங்கள் தோன்றாமலே போயிருக்குமோ?!)

நிலைமை இவ்வாறிருக்க, மீண்டும் தன்னை சந்திக்க தலைவன் எப்பொழுது வருவான் என்ற ஆவல் மட்டுமே தலைவிக்கு பெரும் ஆறுதலாய் இருக்கின்றது. “அவன் வருவானா? வருவானென்றால் என்று? எப்பொழுது?” இதுபோன்ற கேள்விகள் பிரிவுத்துயரில் வாடும் காதலர்களின் பொதுச்சொத்து தானே? (இன்றும் கூட அப்படித்தானே?!)

தலைவி, தலைவன் என்று வருவான் என்பதை அறிய ஒரு யோசனை கூறுகின்றாள் தோழியிடம். அது என்னவென்றால், “தலைவன் என்று வருவான் என்பதை அறிவரிடம் கேட்டு அறிந்து வா” என்றதேயாகும்.

யாரிந்த அறிவர்? முக்காலத்தையும் உணர்ந்த துறவு வாழ்வை மேற்கொண்ட முனிவர்களையே அறிவர் என்று வழங்கினர். இதனை,

மறுவில் செய்தி மூவகைக் காலமும்

நெறியி னாற்றிய அறிவன்

என்ற வரிகள் மூலமாக தொல்காப்பியர் கூறியுள்ளார். இப்பாடலின் புலவர் பெயர் ஓரிற் பிச்சையார் என்பதாகும். அதாவது இந்த அறிவர்கள் பெறும் உணவை ”ஓரிற் பிச்சை” என்று சிறப்பித்ததால், இச்சிறப்புக் காரணமே அவரின் பெயரானது.

தலைவி, தலைவனின் வரவை அறிந்துகொள்ள ஆசைப்படுகின்றாள் என்பதை அறிந்த தோழி உடனடியாக அறிவரை சந்திக்கச் செல்கின்றாள்.

அறிவரை சந்திக்கின்றாள், "இந்த வாடைக்காலத்தின் கடைசி மழை என்று பெய்யும்? வருகிறேன் என்று கூறிச்சென்ற தலைவன் எப்பொழுது வருவார்?" என்ற கேள்விகளுடன் தனது தலைவியின் துயரத்தைப் போக்க, அவரின் பதிலை எதிர்பார்த்து நிற்கின்றாள்.

இந்த அறிவரோ முக்காலமும் உணர்ந்தவர், தோழியின் கேள்வியின் அர்த்தத்தைப் புரிந்துகொண்டவர் அவளுக்கு தகுந்த பதிலைக் கூற யோசிக்கும்போது மீண்டும் தோழி கூறிகின்றாள்...

"அறிவ! என் தலைவியின் மனத்துயரைப் போக்கினால், பொய், களவு, கள், காமமாகிய குற்றங்கள் எதுவும் இல்லாதவர்கள் வாழும் தெருவில், நாயில்லாத அகன்ற வாயிலில் செந்நெல் சோற்றோடு, வெண்ணெயும், பனிக் காலத்துக்கு ஏற்ற வெண்ணீரும் எட்டு வீடுகளில் பெறாமல் எம்முடைய ஒரே வீட்டில் பெற்று வாழ்வாயாக" என்கிறாள்.

அதாவது அக்காலத்தில் துறவு மேற்கொண்டவர்கள் பல வீடுகளிலும் யாசித்து வாழும் வழக்கம் கொண்டவர்கள். இவர்கள் எத்தகைய குற்றமும் புரியாதவர்களைத் தேடிச்சென்று பிச்சை பெற்று வாழ்பவர்கள். அதைத்தான் தோழி கூறுகிறாள், என் தலைவியின் மனத்துயரைப் போக்குமாறு ஒரு நல்ல பதிலைக் கூறினால், பல வீடுகளுக்கும் சென்று இரைந்து வாழாமல், செந்நெல் சோற்றுடன், வெண்ணையும் அத்துடன் முன்பனிக்காலத்தின் குளிருக்கு இதமாக சேமச் செப்பில் வெண்ணீரும் என் வீட்டில் மட்டுமே பெற்று வாழலாம் என்று கூறுகிறாள்.

இப்பாடலின் வாயிலாக முன்பனிக்காலத்தில் அக்கால மக்களும் வெண்ணீர் பருகியுள்ளனர் என்பது தெரியவருகின்றது. அதிலும் வெண்ணீரை சேமச் செப்பில் ஊற்றி வைத்தனர் என்பதிலிருந்து அன்று சேமச் செப்பு (இன்று நாம் பயன்படுத்தும் பிளாசுகு போல) என்ற ஒன்று வழக்கில் இருந்துள்ளது என்பதை அறியமுடிக்கின்றது.

தமிழர் இசை வரலாறு

முனைவர்.சிவகௌரி

சிதம்பரம்

உலகில் தொன்மையான மொழி தமிழ் ஆகும். பண்பாடு, மொழி , இலக்கியம் ,கலை , போன்றவற்றில் 2000 ஆண்டுகள் முன்பு சிறந்து விளங்கியவர்கள் தமிழர்கள். அந்தவகையில் தமிழர்கள் வழங்கி வந்த இசை முறையே தமிழிசையாகும். இயல்,இசை,நாடகம் என அழைக்கப்பட்ட முத்தமிழில் இசை இன்றியமையாததாக விளங்குகிறது.காலத்தால் முற்பட்டது மட்டுமின்றி உலகின் பிற இசைமுறைகளில் முதன்மையானது தமிழிசை.

சங்ககாலத்திற்கு முன்பே தமிழிசை தோன்றி சிறப்பாக வளர்ந்து வந்துள்ளது. தமிழகத்தின் ஒவ்வொரு இடத்தில் வாழ்ந்த மக்களும் தங்கள் இயல்புக்குத் தக்கவாறும் சூழலுக்குத் ஏற்றவாறும், வாழ்க்கைமுறைக்கு ஏற்றவாறும், இசை மரபுகளை ஏற்படுத்தியுள்ளனர். ஆகவே இசைக்கருவிகள், இசையமைப்பு, இசைக்கும்முறை ஆகியன இடத்திற்கு இடம் மாறுபடுகின்றன. இவற்றை தொல்காப்பியக் குறிப்புகளிலிருந்தும், சங்க இலக்கியங்கள் வாயிலாகவும் அறியமுடிகிறது.

தமிழிசை தனித்துவமுடைய இசை என்பதை சங்க இலக்கியங்கள் உறுதிப்படுத்திக் காட்டுகின்றன. இசைக்கருவிகள் ,பண்ணமைப்பு. ஏழிசைப்பகுப்பு ஆகியவை பற்றி ஏராளாமான குறிப்புகள் காணப்படுகின்றன.

அக்கால இசையமைப்பு விதிகளுக்கு உட்பட்டு ,திருத்தம் பெற்ற இசையாக , இலக்கண முறைமைகளுடன் வளர்ச்சியடைந்துள்ளது, திருத்தம் பெற்ற கலைக்கே இலக்கணம் வரையப்படும். பல இசைத்தமில் நூல்கள் வழக்கில் இருந்துள்ளதாக குறிப்புகள் உள்ளன. தமிழில் இருந்து அழிந்துபோன இசைத்தமிழ் நூல்களாக இசைநூல், இசைநுணுக்கம். சிற்றிசை,பேரிசை, இசை விளக்கம் , பஞ்சமா பாரதீயம், போன்ற இன்னும் பல நூல்கள் கூறப்படுகின்றன.

சிலப்பதிகாரத்திலும், அதற்குரிய அரும்பதவுரை, அடியார்க்கு நல்லார் உரை ஆகியவையும் , தமிழ் இசைபற்றி கூறும் கருத்துக்கள் வியக்கத்தக்கவை. ஓசையின் அளவு, இசையமைப்பு . பண்களின் பெயர்கள்,பாடலமைப்பு,தாளவகை,வரிப்பாட்டு, வன்ணங்கள், யாழிசை,குழலிசை, இசை அலகு பெறல், ஆகியவற்றை தனித்தனியாக விளக்கிக்காட்டுமளவிற்கு தமிழிசை ஈராயிரம் ஆண்டுகள் முன்பு திருத்தமாகவும், சிறப்பாகவும் அமைந்துள்ளது. சிலப்பதிகாரத்தில் உள்ள இசைச்செய்திகளில், தமிழிசையின் தொன்மையான பண்கள் பற்றிய குறிப்புகள், பண்கள் பிறக்கும் முறைகள் , வியக்கத்தக்க இசைநுட்பங்கள் நிறைந்தது.

அக்காலத்தில் வழக்கிலிருந்த இசைக்கருவிகளான பலவகை யாழ் ,குழல் தூம்பு.வயிர், சங்கு,கின்னரம் போன்ற கருவிகளும், தோற்கருவிகளான பறை,முரசு, முழவு, தண்ணுமை. தட்டை, சிறுமுழா, கிணை, துடி, தடாரி, பதலை, எல்லரி. ஆகுளி,பம்பை,மத்தரி, மகுளி, சில்லரி, கொட்டு, பாண்டில் குளிர் போன்ற கருவிகள் சிறப்பாக வழக்கில் இருந்துள்ளன. இந்த அளவு பலவகையான கருவிகள் இன்றைய இசைமுறைகளில் இல்லை, சங்ககால இசை மக்கள் வாழ்வியல் முறையோடு பின்னிப்பிணைந்தது. இயற்கையோடு இணைந்த இசை மக்கள் செவிகளில் குளிர்ந்தது

" ஒரு திறம் பாணர் யாழின் தீங்குரல் எழ

ஒரு திறம் வண்டின் இமிரிசை எழ

ஒரு திறம் கன்னார் குழலின் கரைபு எழ

ஒருதிறம் பன்னார் தும்பி பரந்திசை ஊத

ஒருதிறம் மண்ணார் முழவின் இசை எழ

ஒருதிறம் அண்ணல் நெடுநீர் அருவி நீர் ததும்ப

ஒருதிறம் பாடல் நல் விறலியர் ஒல்குபு நுடங்க

ஒருதிறம் வாடை உளவயின் பூங்கொடி நுடங்க

ஒருதிறம் பாடினி முரலும் பாலையங் குரலின்

நீடுகிளர் கிழமை நிறை குறை தோன்ற

ஒருதிறம் ஆடுசீர் மஞ்ஞை அரிக்குரல் தோன்ற

மாறுமாறுற்றன போல் மாறெதிர் கோடல்

மாறட்டான் குன்றம் உடைத்து

(பரிபாடல்)

என்ற பரிபாடலில் இயற்கையோடு இயைந்த ஒலிகளை அக்கால தமிழர்கள் எவ்வாறு அவற்றிலுள்ள இனிமையைக்கொண்டே சுவைத்துள்ளனர் என்பதை உணர்த்துகிறது.

மேலும் பலவகையான இசைக்கலைஞர்கள் வாழ்ந்துள்ளனர் பாணன்,பாடினி, கூத்தன், பொருநர், கிணையர்,கோடியர், போன்ற பல கலைஞர்கள் வாழ்ந்துள்ளனர் .

சங்கமருவியகாலத்தில் வளர்ச்சியும் இன்றி மறையவும் இன்றி விளங்கிய தமிழிசை

பல்லவர் காலத்தில பக்தி இலக்கியங்களோடு மறுமலர்ச்சிபெற்றது காரைக்கால் அம்மையார் , தேவார மூவர் பாடிய தேவாரங்கள், ஆழ்வார்கள் பாடிய திவ்வியப் பிரபந்தங்கள் தமிழிசையோடு சேர்ந்து தமிழுக்கு மேலும் அழகு சேர்த்தன. சோழர்காலம் வரை தமிழிசை தனித்துவமான இசையாகவே விளங்கியது ஆலயங்கள் தோறும் தமிழிசையே ஒலித்தது. தமிழிசையின் வளர்ச்சிக்கு சோழமன்னர்களின் பங்களிப்பு மகத்தானவை.

அதன் பிற்காலங்களில் தமிழிசையில் இசைக்கலப்பும், மொழிக்கலப்பும் ஏற்படத்துவங்கின .

13ம் நூற்றாண்டு வரை தமிழிசை என வழங்கப்பட்டு வந்த இசைமுறை அதன் பிறகு பல மொழிப்பாடல்கள் சேர்ந்து கர்நாடக சங்கீதம் என்ற பெயராக மாற்றப்பட்டது . பண்கள் இராகங்களாக பெயர் மாறின, ஆனால் தமிழ் இசைமுறையானது சில மாற்றங்களுடன் வளர்ச்சி பெற்றது.

தமிழோடு பாடப்பட்ட தேவாரங்கள்மட்டும் பண்ணிசை எனவும் வழங்கிய நிலையில் இன்றுவரை வழக்கில் உள்ளது.

தமிழக இசை அரங்குகளில் தமிழ்மொழிப்பாடல்கள் குறைவாக ஒலிப்பதைக் கேட்ட அண்ணாமலைச் செட்டியார் அவர்கள் தமிழிசை இயக்கத்தினை உருவாக்கினார்.அதன் பல்வேறு நடவடிக்கைகள் மூலம் தமிழிசை மீண்டும் புத்துயிர் பெற்றது.

தற்காலமும் மேற்கத்திய இசைக்கலப்புகளால் தமிழிசையின் தனித்துவம் மெல்ல மெல்ல மாறிவருகிறது என்பது கசப்பான உண்மை.

தற்காலம் தமிழிசை என்றாலே தமிழ்ப்பாடல்கள் என்ற கருத்தே பரவலாக உள்ளது. தமிழகத்தில் தோன்றி தனித்துவமாக விளங்கிய இசையே தமிழிசை என்பதை ஆழமாக உணர்தல் வேண்டும்.

நாட்டுப்புற இசை, தேவாரம் பாடப்படும் பண்ணிசை, கர்நாடக இசை, பழந்தமிழ்க்கருவிகளில் இசைக்கப்படும் இசை , இவை அனைத்துமே தமிழிசை ஆகும்.

தற்காலம் தமிழிசையின் நுட்பங்கள் அவற்றின் தனித்தன்மைகளை ஆராயும் பாங்கு குறைந்தே வருகிறது. தமிழ் அறிவும். இசை அறிவும், சேர்ந்தே இவற்றின் நுட்பங்களை உணர முடியும். ஈராயிரம் ஆண்டு பழமையான தமிழ்இசை வரலாற்றினை ஒரு கட்டுரைக்குள் அடக்க இயலாது. இயன்றவரை தமிழிசையின் சிறப்பினையும், வரலாற்றினையும், அதன் நுட்பங்களை அனைவருக்கும் புரியும் வண்ணம் விரிவாக தொடர் கட்டுரையாக ஆற்றுப்படையின் மின்னிதழில் வழங்கவுள்ளேன்.

முனைவர் சிவகௌரி கிரீஷ்குமார்

தமிழிசை ஆய்வாளர்

தமிழிசைக்கலைஞர்

சீனாவிற்கு தூதுக்குழு அனுப்பிய சோழர்கள்

செல்வராஜ்

தலைமை ஆசிரியர்(ஓய்வு)

அய்யம்பேட்டை

இன்றைக்கு இந்தோனேசியாவில் உள்ள சுமத்திரா நாடு அன்று ஸ்ரீவிஜயம் எனப்பட்டது. இது சோழர்கள் வணிகம் தொடர்புடைய மிக முக்கியமான நாடு. சீன நாட்டிற்கும் இந்தியாவிற்கும், இடையே முக்கியமான கேந்திரமாக ஸ்ரீவிஜயம் நாடு இருந்து வந்தது. இந்த நாட்டினர். சோழர்களுடன் நட்புறவுடன் இருந்தாலும் சோழ தேசத்து வணிகர்கள், சின தேசத்துடன் நோடி தொடர்பு கொள்ள தடையாக, மறைமுக சதியில் ஈடுபட்டு வந்தார்கள் சோழர்கள் தங்கள் அடிமை நாடு என்று சீனாவில் பொய்யான தகவல்களை பரப்பி வந்தார்கள். தங்களுக்கு நேர்ந்த அவமானததை வணிகர்கள் மாமன்னரிடம் முறையிட்டார்கள். இந்த சதியை, துரோகத்தினை முறியடிக்க ராஜராஜ சோழன் ஒரு தூதுக்குழுவை சீனாவிற்கு அனுப்பினார். தூதுக்குழுவினரில் இடம் பெற வேண்டியவர்கள் மிக கவனமுடன் தேர்வு செய்யப்பட்டிருக்கிறார்கள்.

திசை ஆயிரத்து ஐந்நூற்றுவர், மணிக்கிராமத்தார். அஞ்சு வண் த்தார்.நானாதேசிகர் போன்ற கடலோடிகள், வணிக குழுவின் தலைமை பொறுப்பில் இருந்தவர்களாவர், மன்னரின் நம்பிக்கைக்குரிய தளபதிகள். ராஜதந்திரமும், சொல்லாற்றலும் மிக்க அமைச்சர் அந்தஸ்தில் உள்ளவர்கள் என 52 பேர் இக்குழுவில் இடம்பெற்றார்கள். இவர்களின்றி பாய்மரக் கப்பல் செலுத்தும் மாலுமிகள் வானியல் வல்லுனர்கள். மருந்துவர்கள், போர்வீரர்கள்,சமையல்காரர்கள் என்று 500 பேர் இரண்டு மரக்கலங்களில் செல்ல முடிவு செய்திருக்க வேண்டும். இந்த தூதுக்குழுவின் நோக்கம் சீன தேசத்தின் மன்னருக்கு ஸ்ரீவிஜயத்தின் தில்லு முல்லுகளை விவரிப்பதுடன், இணக்கமான நல்லுறவை வலுப்படுத்தி, சோழ தேசத்துடன் வணிக

உறவை விரிவுபடுத்தி மேம்படுத்துவதே ஆகும்... சிறப்பான விரிவான முன்னேற்பாடுகளுடன் ராஜராஜனின் உத்தரவுபடி, கி.பி.1013ல் நாகப்பட்டினம் துறைமுகத்தை அக்குழுவினர் அடைந்தார்கள். கீழ்த்திசை நாடுகளுக்கு பயனம் செய்யும்போது பலமான காற்று வீசத்தொடங்கிய போதும் மரக்கலங்கள் கடலில் பயணிக்கத் தொடங்கின. இந்த தூதுக் குழுவின் தலைமைப் பொறுப்பை ஏற்று நடத்திச் சென்றவர் சோழ சாம்ராஜ்ய சக்கரவர்த்தியின் நம்பிக்கையுடை-ம், அரசியல் சாணக்கியத்தனம் பெற்ற சோழஅரசசபையில் துணை அமைச்சர் அந்தஸ்தில் இருந்தவர் என தெரிகிறது. தூதுக்குழுவினரின் கப்பல்கள் ஈழம் பர்மா,மலேயா,ஸ்ரீவிஜயம் போன்ற இடைப்பட்ட நாடு களுக்கும் சென்றார்கள். அத் நாட்டு மன்னர்களை சந்தித்து தங்கள் நோக்கம் பற்றி தெளிவுபடுத்தினார்கள்.ஆங்காங்கே உணவு மற்றும் குடிநீர் தேவைகளையும் நிறைவு செய்து கொண்டார்கள். இந்து மகா சமுத்திரம், வங்க கடல், சுந்தா நீரினை, மலாகா நீரினை,தென்சீனக்கடல் போன்றவற்றின் வழியே கப்பல் பயணம் நீண்டது. அந்த கால கடல் பயணம் எவ்வளவு சவாலானது, ஆபத்தானது என்று விளக்க தேவையில்லை. பலஇடர் பாடுகள், இயற்கையின் சீற்றங்கள், சோதனைகளை கடந்து ஆயிரத்து 150நாட்கள் பயணத்தின் முடியில் சீன தேசத்தின் துறைமுகப்பட்டினம் குவாங்சூவை அடைந்தார்கள்.

ராஜராஜ சோழன் உயிரோடு இருக்கும்போது புறப்பட்ட

தூதுக்குழு அவர் மறைவிற்கு பின் கி.பி. 1016-ல் தான் சீன தேசத்தை

அடைய முடிந்தது. இவர்கள்

சென்ற நேரம் சீனத்து சோங் வம்சதத்து மன்னரின் பிறந்த நாள் கொண்டாட்டங்களில் நாடே. அமர்க்களப்பட்டு கொண்டிருந்தது.சோழதேசத்தினர் வருகை மன்னருக்கு தெரியப்படுத்தப் பட்டது. செல்வச்செழிப்பை பிரகடனப்படுத்திய சீனத்து மன்னரின் அரசசபைக்கு சோழ நாட்டு தூதுக் குழுவினர் அழைத்துச் செல்லப்பட்டார்கள். சோழ நாட்டிலிருந்து முதன்முதலாக இப்போதுதான் பரிசுப்பொருட்களுடன் தூதுக்குழு சீனம் வந்துள்ளது. சீனாவிற்கு மேற்கில் உள்ள நாடுகளில் இருந்து சீனா விற்கு சென்ற முதல் தூதுக்குழுவும் இதுதான்.இது தமிழர்களின், தமிழ் வணிகர்களின் தூதுக்குழு என்பதில் தமிழருக்கு பெருமை.

முத்துக்களால் அலங்கரிக்கப் பட்ட குல்லாய்(கிட்டத்தட்ட ஒரு கில யானை தந்தங்கள், சாம்பிராணி, சந்தனம் ஜவ்வாது போன்ற வாசனை திரவியங்கள் மற்றும் தங்க தகட்டில் எழுதப் பட்ட கடிதத்தையும் சீன மன்ன னிடம் சமாப்பித்தார்கள் தூதுக்கு ழுவினர். விலை உயர்ந்த அபூர்வு மான பரிசுப் பொருட்கள், மன்னரின் கடிதம் தம் நட்பு நாடி பல ஆயிரம் மைல்களை தாண்டி வந்திருந்தவர்கள் மேல் சீன மன்னருக்கு அன்பும், மரியாதையும் ஏற்பட்டடது. தூதுவர்களுக்கு முதல் தரமான மரியாதை தந்து கவுரவிக்கப்பட்டார்கள். மாமன்னரின் ஆசை அவர் நினைத்தபடியே நிறைவேறியது. ஸ்ரீவிஜயம் இவ்வளவு காலம் அரங்கேற்றிய நாடகம் திரையிடப்பட்டது. குழுவினர் சில காலம் சீன தேசத்தின் விருந்தினராக இருந்து செல்லக்கேட்டுக் கொள்ளப் பட்டார்கள் குவாங்க்கு நகரில் சோழ தேசத்து வணிகர்கள் முகாமிட்டு தங்க இருப்பிடமும், வழிபாட்டிற்கு

சிவாலயமும் கட்டிக்கொள்ள அனுமதிக்கப்பட்டார்கள்.

சோழத்திலிருந்து புறப்பட்டு மூன்று ஆண்டுகளுக்கு மேலாகிவிட்டது இனியும் தாமதிக்காது உத்தரவு பெருகிறார்கள் மேலும் தன் நாட்டின் அதிசயமான பொருட்களை சோழமன்னவனுக்கு பரிசாக கொடுத்து வைக்கிறார் சீன மன்னர். வந்த காரியம் இனிதே சுபமாக முடித்த மழ்ச்சியோடு பாய்பரக் கப்பல் பயணிக்க தொடங்கியது. வேறு எந்த நாட்டிற்கும் செல்லாமல் சோழநாட்டை குறிவைத்து கப்பல்கள் நாகை துறைமுகத்தை வந்தடைத்தது.

மாமன்னர் ராஜராஜசோழரிடம் தூதின் வெற்றியை தனதாக்கியது குறித்த மகிழ்ச்சியை பகிர வந்த தூதுக்குழுவினரை மாமன்னரின் மரண செய்தி தாக்கியது. அவருடைய மகன் ராஜேந்திர சோழன் மன்னராக முடி சூடி,சக்கரவர்த்தியாக ஆட்சி பீடமேறிய தகவல்கள் கிடைக்கின்றன. மன்னர் ராஜேந்திர சோழனை சந்தித்த, தூதுக்குழுவினர் சீன தேசத்து மன்னர் வழங்கிய பரிசு பொருட்களையும், நட் புணர்வு, வணிகப் புரிதல் அடங்கிய அறிக்கையையும் சமர்ப்பித்தனர். தந்தையார் அனுப்பிய தூது குழுவினர் அவர்தம் நீண்டநாள் ஆசையை பூர்த்தி செய்து திரும்பியவர்களை உரிய முறையில் வரவேற்று கவுரவிக்கிறார். ராஜேந்திர சோழர் இவர்களின் கடற்பயணம்,இடைப்பட்ட நாடுகளின் மன்னர்கள் சீனதேசத்து மன்னர். மக்கள் மற்றும் அந்த நாட்டின் வணிக வாய்ப்புகள் எல்லாம் விவரமாக கவனமாக

கேட்டு தெளிவு பெறுகிறார். இந்த கடற்பயணமே ராஜேந்திர சோழர் கடாரம் உட்பட கீழ் திசை நாடுகளுக்கு வெற்றிப் பயணம் மேற்கொள்ள ஒரு வழிகாட்டு பயணமாக அமைந்தது எனலாம்.

சோழ தேசத்து

குழுவினரின் வரலாற்று சிறப்பு:

இந்த கடல் பயணத்தை என்றென்றும் நினைவில் இருக்கும் வகையில் ஒரு நினைவுச்சின்னம் அமைக்க முடிவு செய்கிறார் மன்னர். ஆயிரக்கணக்கான மைல்கள்

நீரில் பயணித்து சாதனை படைத்தவர்களுக்கு ஒரு நீர் நிலைக்கே

பெயர் வைக்க முடிவு செய்கிறார்.

தமிழர்களின் இந்த சாதனைக்கு

சொந்தக்காரர் தலைவர் துணை

அமைச்சர் சூலிசன் வென் என்று

சீன தேசத்து ஆவணங்களில்

காணப்படுகின்றது.இந்தபெயரை

ஜப்பான் நாட்டு ஆராய்ச்சியாளர்

சோழ சமுத்திரம் என்று மொழி

பெயர்த்திருக்கிறார். எனவே

தூதுக் குழுவை பெருமைப்படுத்தும் விதமாக தஞ்சையின்

கிழக்குப் பகுதியில் உள்ள மிகப்பெரிய ஏரிக்கு சோழ சமுத்திரம்

என்று மன்னர் பெயர் சூட்டினார்.

இதுவே தஞ்சை மக்களால் சோழ

சமுத்திரம் என்று இன்றளவும் அழைக்கப்படுகிறது.

வரலாற்றுக்கு முந்தைய கால அரியலூர் - ஒரு பார்வை

சி.சிவகுமார்,

காப்பாட்சியர்

(கூ-பொ) கள புதை உயிரிப் படிவ அருங்காட்சியகம்,

வாரணவாசி, அரியலூர்

ஏறக்குறைய 65 144 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு இருந்த காலகட்டம் 'கிரிட்டேசியஸ் காலம்' என்று அறியப்படுகிறது. அப்போது, தற்போதைய அரியலூர் பெரம்பலூர் மற்றும் திருச்சி மாவட்டத்தின் சில பகுதிகள் பண்டைய கால கடலான தித்திக்கடல் (இந்திய பசிபிக்) குறைவான ஆழத்தில் மூழ்கி இருந்தது. பின்னர் ஏற்பட்ட பல்வேறு புவியியல் சார் நிகழ்வுகளால் கடல் பரப்பு தற்போதைய பாண்டிச்சேரி வரை பின்வாங்கியது. இந்த நிகழ்வின் போது கடலானது தொடர்ந்து பின்வாங்கிய நிலையில் பல்வேறு விதமான மாண்டு போன விலங்குகள் மற்றும் தாவரங்களை அதன் தரைப்பகுதியில் விட்டுச் சென்றது. அவற்றின் மீது பிற்காலத்தில் மண் படிவுகள் ஏற்பட்டு அவை புதை உயிரிப் படிவங்கள் ஆயின.

இந்த கடல் பின்வாங்கிய நிகழ்விற்கு பல லட்சக்கணக்கான ஆண்டுகளுக்கு பின்னர், தரைப்பகுதி மேற்கூறிய மாவட்டங்களில் சில பகுதிகளாக ஆகி அங்கு ஏற்கனவே புதைந்திருந்த புதை உயிரிப் படிவங்கள் மண்ணரிப்பு மற்றும் காலநிலையாலும் மனித நடவடிக்கையாலும் வெளிப்பட தொடங்கின. இங்குள்ள அரிய புவியியல் அமைப்பு உலகத்தில் வேறு எங்கும் காணப்படாத தனித்துவமான அமைப்பாக இருப்பதால் இதனை "கிரிட்டேஷியஸ் ஊழியின் திறந்த வெளி அருங்காட்சியகம்" என்று அழைக்கின்றனர். புகழ்பெற்ற புவியியலாளர்கள், பண்டைய கால பருவநிலை ஆய்வாளர்கள், புதை உயிரி வடிவ ஆய்வாளர்கள், தொல்பழங்கால பொருட்களை ஆய்வு செய்பவர்கள், கல்வியலாளர்கள் மற்றும் ஆர்வலர்கள் ஆகியோர் தொடர்ந்து இங்கு இருக்கும் திறந்த வெளி பகுதிகளில் மனிதன் நடவடிக்கை மூலமாக அல்லது

இயற்கை சூழலால் வெளிப்படும் புதை உயிரிப் படிவங்களை ஆய்ந்தறிந்து, அது குறித்து உலகப் புகழ்வாய்ந்த கருத்தரங்குகளில் பதிவு செய்து வருகின்றனர்.


கள்ளக்குறிச்சி மற்றும் அதன் அருகமைந்த பகுதிகள் கிரிட்டேசியஸ் ஊழிக் காலத்தில் கடற்கரையாக இருந்தன. எச்சில் நோட்ஸ் ஜிப்ரா மெல்லுடலிகள் போன்ற எண்ணற்ற கடல் வாழ் விலங்கினங்களின் இங்கும் கள்ளக்குறிச்சியை சுற்றி உள்ள பகுதிகளிலும் எண்ணிறைந்த அளவில் காணப்படுகின்றன.


தென்னிந்தியாவிலேயேமுதன்முதலாக, புதை உயிர் படிவமாக மாறிய சாக்கோடியன் டைனோசர், டிடனோசரஸ் இன்டிகஸ் என்ற விலங்கினத்தின் முட்டை ஒன்று அரியலூர் பகுதியில் கண்டறியப்பட்டுள்ளது. இங்கு மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் பணி ஓடை அல்லது நதி நீரோட்டம் இந்த அரிய டைனோசரின் முட்டையை நிலப்பரப்பிலிருந்து கடல் பகுதிக்கு கிரேட்டேஷியஸ் காலத்தில் கொண்டு வந்து சேர்த்து இருக்கலாம் என்று கருதப்படுகிறது. இந்த முட்டையின் மிக கடினமான ஓடு இருந்ததால் அது மிக நீண்ட தூர நதி பிரயாணத்தின் போது சேதம் ஏற்படாமல் இருக்க காரணமாக அமைந்தது.

கள்ள மேடு என்கின்ற கிராமத்தில் டைனோசர் முட்டை மற்றும் அதன் முட்டை ஓடு ஒன்று இரண்டாவது முறையாக கண்டுபிடிக்கப்பட்டதாக அறிக்கை செய்யப்பட்டுள்ளது. இந்த கண்டுபிடிப்பு தொல்பழங்கால இயற்கை மற்றும் புவியியல் நோக்கத்தில் மிக முக்கியமான கண்டுபிடிப்பாக கருதப்படுகிறது ஏனெனில் இதே போன்ற புதை உயிரிப் படிவங்கள் மத்திய இந்தியா, பிரான்சு, அர்ஜென்டினா மற்றும் மொராக்கோவில் கிடைத்திருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இதே போன்ற புதைவு இருப்ப படிவங்கள் தென் அமெரிக்கா ஐரோப்பா மற்றும் இந்தியா பகுதிகளில் ஒன்று போல கிடைத்திருப்பதால் பின் கிரிட்டேசியஸ் கால தொல் பழங்கால இயற்கை மற்றும் புவியியல் சார்ந்த தொடர்புகள் இந்தியாவிற்கும் தென் அமெரிக்கா மற்றும் ஐரோப்பா ஊடாக ஆப்பிரிக்கா உடன் ஒத்து இருப்பது நோக்கற்பாலது. 2013 -ஆம் ஆண்டு அறிவியலாளர்கள் கள்ளமேடு பகுதியில் சிமோசோசஸ் என்று அழைக்கப்படக்கூடிய சிறிய நில முதலையின் எலும்புகள் மற்றும் பற்களை கண்டறிந்துள்ளனர். இது ஒரு சிறப்பு வாய்ந்த கண்டுபிடிப்பாகும்.









காதர் நவாப் அமைத்த லிங்கம்

சதீஸ்குமார்

தலைமைச் செயலக அலுவலர்

சென்னை

ஜயங்கொண்ட சோழ மண்டலத்து (தற்போதைய காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர்) மேலூர் கோட்டத்து (தற்போதைய திருத்தணி வட்டம்) ஒகவல் நாட்டு (திருத்தணி) பெருங்காஞ்சி கீழ்ப்பிடாகையான அகுவூர் திருத்தணியற் என்று சோழர் கால கல்வெட்டில் திருத்தணியின் அமைவிடம் குறிக்கப்படுகிறது. இதே கல்வெட்டில் 'திருமலை' மேலெழுந்தருளி நிற்கும் சுப்பிரமணிய பிள்ளையார் என்றே இறைவன் வழங்கப்படுகிறார்.

திருத்தணி கோயிலை கட்டியதாக அறியப்படும் அபராஜித பல்லவனின் கல்வெட்டுகளில் 'திருத்தணியல்' என்று ஊரின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது.

அறுபடைவீடுகளில், ஐந்தாம் படைவீடு. வள்ளியை மணந்த தலம். செரு தணிந்து நின்றமையால், செருத்தணிகை ஆயிற்று. பின்னர், திருத்தணிகை ஆயிற்று.

இலக்கியங்களில், தணிகை மாமலை, திருத்தணி மேவும் பெருமாள், நீலவெற்பு, குவளைச் சிகரி எனப் பலவாறாக வழங்கப்படுகிறது.

சுப்பிரமணியர் கோயிலுக்கு, சரவணப்பொய்கையிலிருந்து 368 படிகள் ஏறிச்செல்ல வேண்டும். கோயில் நான்கு திருச்சுற்று அல்லது பிரகாரங்களுடன் அமைந்துள்ளது.

முதல் திருச்சுற்று

சுப்பிரமணியர், ஞான சக்திதரன் கோலத்தில் பக்தர்களுக்கு காட்சி தருகிறார். வலக்கரத்தில் மூவிதழ்ச் சக்தியாகிய ஞானவேலும், தொடையின் மீது இடக்கரத்தையும் வைத்திருக்கும் மயிலின்றி நின்ற திருக்கோலம்.

வலது புறத்தில், வள்ளியம்மன். வலது கரம் தொங்கிய நிலையிலும், இடது கையில் தாமரையும், தலையில் கரண்ட மகுடமும் கொண்ட அமைப்பு.

இடது புறத்தில் தெய்வானை. இடது தொங்கிய நிலையிலும், வலது கரத்தில் நீலோற்பல மலரும், தலையில் கரண்ட மகுடமும் கொண்ட அமைப்பு.

அர்த்த மண்டபத்தில் தெற்குக் கோட்டத்தில் விநாயகர், வடக்கில் துர்க்கை, சண்டிகேசுவரர், முருகப்பெருமான் உருவங்கள்.

முதல் திருச்சுற்றின் மேற்குப்பகுதியில் பாலசுப்ரமணியர் சன்னதி உள்ளது. மேல் இருகைகளில் அக்கமாலை, கமண்டலம் ஏந்தியும், கீழ் இரு கைகளில் அபயம், கடிஹஸ்தம் முத்திரைகளுடனும், வயிறில் உதரபந்தம், தலையில் கரண்ட மகுடம், நெற்றியில் கண்ணி மாலை, காதுகளில் குண்டலங்களுடன் அமைக்கப்பெற்றுள்ள பாலசுப்ரமணியர் திருவுருவம் பல்லவர்களால் அமைக்கப்பட்டதாக வேலஞ்சேரி செப்புப் பட்டயத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இரண்டாம் திருச்சுற்று

தெற்குச் சுவரில் காஞ்சி ஏகாம்பரர் சன்னதியும், பள்ளியறையும், அர்த்தநாரீஸ்வரர் கோயிலும், மேற்கில் அருணாசலீஸ்வரர், சிதம்பரேஸ்வரர் சன்னதிகளும் உள்ளன.

ஆறுதலைகளுடன், பன்னிரு கரங்களுடன் ஆறுமுகர் சன்னதி உள்ளது. இங்குள்ள சந்தனக்கல், இந்திரன் தன் மகள் தெய்வானைக்கு சீதனமாக கொடுத்ததாம். இன்றும், இதில் அரைக்கப்படும் சந்தனம் முருகனுக்குச் சாத்தப்படுகிறது. இந்த சன்னதியில், ஆபத்சகாய விநாயகர், அருணகிரிநாதர், நவ வீரர்கள், வீரபத்திரர், சூரியன் ஆகியோரது சிற்பங்கள் உள்ளன். ஆபத்சகாய விநாயகர்தான் வள்ளியை பயமுறுத்தி முருகன் மேல லவ் வர வச்சுருக்கார். தம்பிக்காக பயபுள்ள என்னா வேல பண்ணிருக்கு பாருங்க...

மூன்றாம் திருச்சுற்று

கிழக்கில் ஸ்ரீகுந்தம் செங்கல்வராயர் கோபுரம், கொடிக்கம்ப விநாயகர், ஐராவத சன்னதி ஆகியவை உள்ளன. ஐராவதம் இந்திரனின் வாகனம். தெய்வானைக்கு வரதட்சணையா இதையும் கொடுத்துவிட்டதால், தேவலோகம் பொலிவிழந்துவிட்டதாம். ஆனாலும், தேவலோகம் இருக்கும் கிழக்கு திசையை நோக்கி ஐராவதம் இருந்தா போதும் என இந்திரன் கேட்டுக்கொண்டதால், மாமனார்க்காக ஐராவதத்தை ஈஸ்ட் ஃபேசிங்கல வச்சுருக்கார் மருமகன்.

நான்காம் திருச்சுற்று

இங்கதாங்க நமக்கு தேவையான பிரசாத கடைங்க, பஞ்சாமிர்த கடைலாம் இருக்கு. தங்கத் தேர் மண்டபம் இருக்கு.

இச்சுற்றின் நுழைவாயிலின் தென்புறத்தில் பிரசன்னநாதர் ஈசுவரர் சன்னதி உள்ளது. இந்த இடத்துல, காதர் நவாப் என்கிறவர் அமைத்த லிங்கமும், சர்வ வாத்திய மண்டபமும் உள்ளது.

முருகன் சினம் தணிந்த இடமாதலால், சூரசம்ஹார விழா இங்கு கொண்டாடப்படுவதில்லை.

செங்கல்பட்டுக்கு அருகில் உள்ள ஆனூர் பெருமாள் கோயிலில், இராஜ ராஜ சோழனின் 14 ஆம் ஆட்சியாண்டு (கி.பி.999) கல்வெட்டில் திருத்தணி கோயிலுக்கு சொந்தமான நிலத்தை பிராமணர் ஒருவருக்கு தானமாக கொடுத்த தகவல் உள்ளது.

திருத்தணியிலிருந்து நகிரி செல்லும் வழியில், பைபாஸில் உள்ள வேலஞ்சேரியில் கிடைத்த அபராஜிதன் மற்றும் முதலாம் பராந்தகனின் செப்பு பட்டயங்கள் வரலாறைப் புரட்டி போட்டவை. உலகை உலுக்கி எடுத்த பிற்காலச் சோழர்கள் சாம்ராஜ்யத்தை கட்டமைத்த விஜயாலயச் சோழனின் தந்தை ஒற்றியூரான் என்பதை இந்த செப்புப் பட்டயங்களே பறை சாற்றுகின்றன. ஒற்றியூர் என்பது தற்போதைய திருவொற்றியூரைக் குறிக்கும்.

திருத்தணி வரலாறில் என்றென்றும், நீங்கா இடம் பெற்ற தலம்.

புள்ளினங்கள் அறிவோம்

சரவண மணியன்

காளையார்கோவில்

கிட்டத்தட்ட 35செமீ அளவில் பருந்துகளை விட அளவில் சிறியதாக இருந்தாலும், நல்ல அகண்ட தோள்களை உடையவரும், உடல் வெளிர் சாம்பல் நிறத்திலும், அடிவயிற்றுப் பகுதி வெள்ளை நிறத்திலும், கழுத்து முதல் அடிவயிறு வரை செம்பழுப்பு நிற பட்டையான கோடுகளையும் கொண்டிருக்கும்(பெண் பறவைகள், ஆண் இனத்தை விட பெரியதாகவும் வலிமை மிக்கதாகவும் இருக்கும்) இவர் தான்ங்க வல்லூறு.

ஆசியா மற்றும் ஆப்பிரிக்கா முழுவதும் பரவலாக காணப்படும் இவர் வல்லூறு (Hawk) குடும்பத்தைச் சார்ந்த பறவைங்க. குயிலின் அளவு தான் இருப்பாப்ளங்க. இலைகள் அடர்ந்த மரத்திலும், சிறிய பறவைகள் நிறைந்த இடத்திலும், ஓணான், அணில், எலி, தவளை, பல்லி, வெட்டுக்கிளி, மற்ற சிறிய பறவைகள்(சிட்டுக்குருவி, காடை, கௌதாரி), ஈசல் - இவைகளை தான் வானத்தில் வட்டமிட்டு வந்தும், மரங்களின் கிளைகளில் அமர்ந்தும் விரும்பி வேட்டையாடி சாப்டுறாப்ளங்க.

சங்க இலக்கியங்களில் சிற்றெழால் என்ற பெயரில் குறிப்பிடப்பட்டுள்ளார்ங்க. அதேபோல உலகமெங்கும் உள்ள நாடுகளிலும் இதனை வளர்த்து வேட்டைக்கு பயன்படுத்தியும் இருக்காங்க(இதனை ஒரு கலையாக போற்றியுள்ளார்கள்).

தமிழகத்தில் பிற்காலத்தில் இயற்றிய கருணீகர் புராணத்தில் சென்னிச் சோழன் என்ற அரசன் வல்லூறு கொண்டு வேட்டையாடினதாகக் கூறப்பட்டுள்ளது. இந்தப் புராணத்தில் பல்லவர்கள் போரிட்ட ஊர்களின் பெயர்கள் கூறப்பட்டிருப்பது பல்லவர் வரலாற்றோடு ஒத்துக் காணப்படுகின்றது.

காட்டிலே வலையொ ழுங்காய்க் கயிறதாம் கண்ணி சேர்த்தும்,

வெட்டியே முட்க டன்னை வெளிதெரி வழிய டைத்தும்,

மட்டிலா பதங்க மான மாளவே வேட்டைக் காரன்,

விட்டனர் வல்லூறு தன்னை வீழ்ந்திடப் பறவை தானை.



கீழக்குறிச்சி புத்தர்

முனைவர் ம. செல்வபாண்டியன்

அரும்பாவூர்

அண்மையில் கீழக்குறிச்சியில் உள்ள தலையற்ற புத்தரைக் காண நண்பர் மா. சரவணவேலுடன் சென்றிருந்தேன். அங்கு சென்று புத்தர் சிற்பத்தைக் குறித்து விசாரித்தபோது, அவ்வூர் மக்கள் புத்தரை 'பூதம்' எனவும் அந்த சிற்பத்திற்கு அடியில் புதையல் உள்ளது எனவும் கூறினர். பவுத்தச் சிற்பங்களைக் காண தமிழகம் முழுவதும் மேற்கொண்ட பல்வேறு கள ஆய்வுகளில் அவ்வப்பகுதி மக்கள் இதனையொத்த கதைகளையே கூறி வருவது நினைவுக்கு வந்தது.

தலையிழந்த புத்தர் சிற்பங்கள்

தமிழகம் மற்றும் புதுச்சேரியில் 25 தலையிழந்த புத்தர் சிற்பங்கள் கண்டறியப்பட்டுள்ளன. அவற்றுள் இராயம்புரம், வளையமாபுரம், பட்டீஸ்வரம் ஆகிய ஊர்களில் கண்டறியப்பட்ட சிற்பங்கள் காணாமற் போய்விட்டன. இதுவன்றியும் தமிழகம் மற்றும் புதுச்சேரி பகுதிகளில் கோனேரிகுப்பம், பெரண்டாக் கோட்டை, வையச்சேரி, முழையூர், சீதக்க மங்கலம், கிருமம்பாக்கம் ஆகிய ஊர்களில் புத்தரின் தலைப்பகுதிகள் கண்டறியப்பட்டுள்ளன. இவற்றுள் வையச்சேரி, முழையூர், சீதக்கமங்கலம் ஆகிய ஊர்களில் கண்டறியப்பட்ட தலைப்பகுதிகள் காணாமற் போய்விட்டன.

கடந்த பல ஆண்டுகளாக நான் மேற்கொண்ட பவுத்தக் கள ஆய்வுகளின் போது இராயம்புரம், குழுமூர், மயிலாப்பூர், மாமல்லபுரம், கருவடிக்குப்பம், மணப்பட்டு, திருபுவனம், அரியாங்குண்டு, சேலம், மேலமடை, ஆகிய ஊர்களில் கண்டறியப்பட்ட தலையிழந்த புத்தர் சிற்பங்களையும், கோனேரி குப்பம், பெரண்டாக்கோட்டை, கிருமம்பாக்கம் ஆகிய ஊர்களில் கண்டறியப்பட்ட புத்தரின் தலைப்பகுதிகளையும் கண்டுள்ளேன்.

திருச்சிராப்பள்ளி மாவட்டம்

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் குழுமணி, பெட்டவாய்த்தலை, முசிறி, மங்கலம், ஆயிரவேலி அயிலூர், வெள்ளமீர், கீழக்குறிச்சி ஆகிய ஊர்களில் புத்தர் சிற்பங்கள் கண்டறியப்பட்டுள்ளன. குழுமணி, பெட்டவாய்த்தலை, முசிறி ஆகிய இடங்களில்

கண்டறியப்பட்ட புத்தர் சிற்பங்கள் திருச்சிராப்பள்ளி அரசு அருங்காட்சியகத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

கீழக்குறிச்சி

திருச்சி மத்திய பேருந்து நிலையத்திலிருந்து புதுக்கோட்டை செல்லும் நெடுஞ்சாலையில், மத்திய சிறைக்கு முன்னதாகவே இடதுபுறம் செல்லும் ஒரு நேர்ச்சாலை நம்மை பொன்மலைப்பட்டிக்கு அழைத்துச்செல்கிறது. சாலையின் ஒருபுறம் 'பொன்மலை' எனவும் எதிர்ப்புறம் 'பொன்மலைப்பட்டி' எனவும் அழைக்கப்படும் விசித்திரத்தை உடன் வந்த நண்பர் விளக்குகிறார். பல்வேறு குறுகிய திருப்பங்களுக்குப் பிறகு நத்தமாடிப்பட்டியை அடைகிறோம். இவ்வூர் திருச்சிராப்பள்ளி விமான நிலையத்தின் பின்புறம் அமைந்துள்ளது. விமான நிலைய விரிவாக்கத்திற்காக இவ்வூரின் பெரும்பகுதியை அரசு கையகப்படுத்திக் கொண்டுள்ளது. மக்கள் கடுமையாகப் போராடிப் பார்த்தும் பயனில்லை. ஊரை ஊடறுத்துச் செல்லும் சாலையில் பயணிக்கிறோம். அழகிய வீடுகள். பழமையான தேவாலயம். அம்மன் கோவில். வாய்க்கால் பாலத்தைக் கடக்கிறோம். வலதுபுறம் செல்லும் சாலை முடுக்குப்பட்டிக்குச் செல்கிறது. இடதுபுறம் செல்லும் சாலை கீழக்குறிச்சிக்குச் செல்கிறது. வாய்க்காலின் உயர்ந்த கரையிலிருந்து தணிவாகக் கீழிறங்கி தெற்கு நோக்கிச் செல்லும் சாலை 'தெற்குத்தெரு' எனும் குடியிருப்பினை அடைகிறது. சாலையின் இருபுறத்தும் பசிய வயல்கள் . மாலை சூரியனின் கதிர்கள் பட்டு நெற்பயிர்கள் மினுங்குகின்றன. மஞ்சள் வெயில் சூழலையே அழகாக்குகிறது. சற்றொப்ப நாற்பது வீடுகள் இருக்கும். 'தெற்குத் தெருவில்' , எதிர்ப்பட்ட இளம்பெண்ணிடம் விசாரிக்கிறோம். 'புத்தர் சாமியா அப்படியெல்லாம் எங்க ஊர்ல எந்த சாமியும் இல்லியே' என பதில் வருகிறது.

அவருக்குத் துணை சேர்ந்த மற்றொரு பெண், 'கட்டையன் காட்டுல நட்டு வச்சிருக்குதுல்ல தலை இல்லாத பூதம். அந்த பூதத்தை ஏதும் கேக்குறாங்களோ என்னுமோ?' என்றார். இத்தகைய கதைகளைக் கேட்டுப் பழகி இருந்த நாங்கள் ஆர்வமானோம். 'ஆமாம் மா, அதத் தான் பார்க்க வந்தோம். ஆனா அது பூதம் இல்லமா! புத்தர் சாமி. யாரோ தலய உடச்சிட்டாங்க' என்று விளக்குகிறோம். 'கட்டையன் காட்டுக்கு எப்படிப் போகணும்' எனக் கேட்கிறோம். ஊருக்குத் தென் கிழக்கே இருந்த தென்னை மர வரிசையைக் காண்பிக்கின்றனர். எருக்கும் கருவேல

முள்ளும் ஆவாரையும் முளைத்த பயிரிடப்படாத நிலத்தின் பெரும் பரப்பை குறுக்காகக் கடக்கிறோம். இரும்புக் கேட்டின் தாழைத் திறந்து பசிய வயல்களுக்குள் நுழைகிறோம். வேம்பின் அடியில் பல ரகமான சோடிச் செருப்புகள் கிடக்கின்றன. வயல் வேலைக்கு வந்த பெண்களின் செருப்புகளாக இருக்கக் கூடும். மாலை 5 மணி ஆகியும் வேலைகள் இன்னும் முடியவில்லை. செருப்புகளை அங்கேயே விட்டுவிட்டு வரப்பில் நடக்கிறோம். காலையில்தான் களை பறித்திருப்பார்கள் போலிருக்கிறது. பறித்த களைகளையும் 'நெல்லு மிலட்டிகளையும்' வரப்பிலேயே போட்டிருந்தனர். அவற்றில் ஒட்டியிருந்த இன்னும் உலராத சேறு எங்கள் வெற்றுப் பாதங்களில் பட்டு வழுக்கச் செய்தது. கவனமாக நடக்கிறோம். 'நீங்க யாரு ஒங்களுக்கு என்ன வேணும்' ? எனும் குரல் கேட்டுப் பார்க்கிறோம். வேலிக்கு அந்தப்புறமாக மாடு மேய்க்கும் இரு இளைஞர்கள். நாங்கள் யார் என்பதைப் பேசி விளங்க வைக்கிறோம்.

பின்பு புத்தர் சாமியைப் பார்க்க வந்ததாகக் கூறி முன்னேறி நடக்கிறோம். நான்கு வரப்புகள் சேரும் மையத்தில் பள்ளிச் சந்தக் கல்வெட்டு எவ்வித சேதமுமின்றி நிற்கிறது. கல்வெட்டினைப் படித்துக் குறிப்பெடுக்கிறோம். கல்வெட்டு பொறிக்கப்பட்ட கல்லிலிருந்து நேர் மேற்காகச் செல்லும் வரப்பின் முடிவில் இடுப்பு வரை புதைந்த நிலையிலான புத்தர் சிற்பம் ஒன்று உள்ளது. அருகில் செல்கிறோம்.

வேலிக்கு மறுபுறமிருந்து இளைஞர்கள், 'அத தொட்டுடாதீங்க சார், பூதம். ஏதாவது கெடுதல் பண்ணிப்பிடும்' என்கின்றனர். 'இவர் பூதமில்லை, புத்தர்' என மீண்டும் விளக்குகிறோம். இளைஞர்கள் ஏற்றுக் கொள்ளத் தயாராயில்லை. 'இந்த காட்டை ஏஆர்எஸ் காடுன்னு சொல்வாங்க' நான் இடை மறிக்கிறேன். 'இல்லப்பா கட்டையன் காடுதானே' . 'ஆமா சார் அது பழய பேரு. ஏஆர்எஸ்னு ஒருத்தர் வாங்கிட்டாரு. அதனால இது ஏஆர்எஸ் காடுதா' , நாங்கள் ஆமோதிக்கிறோம். இந்த செலைக்கு அடியில தங்கப் புதையல் இருக்கு. இரத்த பலி கொடுத்துதா அத எடுக்க முடியும்' என இளைஞர்களில் ஒருவரான ஆனந்த் விவரித்துக் கொண்டே செல்கிறார். நாங்கள் நொந்து போய்க் கேட்டுக் கொண்டிருக்கிறோம்.

தலையிழந்த புத்தரும் கல்வெட்டும்

அர்த்த பத்மாசனக் கோலத்தில் அமைந்த இச்சிற்பத்தின் தலை சிதைக்கப்பட்டுள்ளது. கரங்கள் தியான ஹஸ்தத்தில் அமைக்கப்பட்டுள்ளன. இதன் காலம் கி.பி. 11-12ம் நூற்றாண்டாகலாம். (பீடம் முதல் கழுத்துப் பகுதி வரை உயரம் 71 செமீ / அகலம் 52 செமீ / கனம் 38 செமீ) புத்தர் சிற்பத்திலிருந்து சற்றுத் தொலைவில் நடப்பட்டுள்ள ஒரு கல்லில் எழுத்துப் பொறிப்புகளும் குறியீடுகளும் வெட்டப்பட்டுள்ளன.

கல்வெட்டு

இந்நிலம் பள்ளிச்சந்த நிலம் என்பதை அடையாளப்படுத்த, கல்வெட்டும் பவுத்த மங்கலச் சின்னங்களும் பொறிக்கப்பட்ட இக்கல் நடப்பட்டுள்ளது. செவ்வக வடிவமுடையதும் 1.5 செமீ உயரமும் 50 செமீ அகலமும் கொண்ட கல்லின் மேற்பகுதியில் நாற்புறமும் கல்வெட்டு பொறிக்கப்பட்டுள்ளது. கல்லின் நான்கு பக்கங்களிலும் மங்கலச் சின்னங்கள் பொறிக்கப்பட்டுள்ளன. கல்லின் கிழக்கு, வடக்குப் பக்கங்களில் திருமருவும் இருபுறமும் சாமரங்களும், மத்தியில் பூரண கும்பமும் இருபுறமும் உடுக்கை போன்ற பசும்பையும் கலப்பையும் (மேழி) பொறிக்கப்பட்டு இவற்றுக்குக் கீழே தர்மச்சக்கரமும் அதன் இருபுறத்தும் விளக்குகளும் காட்டப்பட்டுள்ளன. மேற்கு மற்றும் தெற்குப் பக்கங்களில் திருமருவும் இருபுறமும் சாமரங்களும் மத்தியில் பூரண கும்பமும் பொறிக்கப்பட்டுள்ளன.

இடம் : கீழக்குறிச்சியில் உள்ள தனியார் நிலம் (கட்டையன் காடு)

மன்னன் : -

ஆட்சியாண்டு: -

காலம் : 11 - 12ம் நூற்றாண்டு

கல்வெட்டு தரும் செய்தி

வீரத்தாவளம் என்ற வணிக ஊரில் அமைந்த பௌத்தப் பள்ளிக்கு, செந்தாமரைக் கண்ண நல்லூர் எனும் ஊரின் விளை நிலங்கள்

கொடையளிக்கப்பட்டன. அந்நில விளைச்சல் முழுதும் அளிக்கப்பட்டதோடு, விளைச்சல் வருவாய்க்கான வரியும் நீக்கப்பட்டு முதலடங்க இறையிலி நிலமாக வழங்கப்பட்டது. செந்தாமரைக் கண்ண நல்லூர் என்பது இக்கல் உள்ள வயற்பகுதியாகலாம்.

கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீ வீர தாவளத்தில் பௌத்தப்பள்ளிக்கு இந்த செந்தாமரைக் கண்ண நல்லூர் முதலடங்க இறையிலியான பள்ளிச் சந்தம்.

வீழ்ச்சி

பவுத்த சமயத்தின் மீது நிகழ்த்தப்பட்ட பல்முனைத் தாக்குதல்களால் படிப்படியாக அச்சமயம் அழியத் தொடங்கியது. வைதீக சமயங்களைச் சார்ந்த ஆளும் வர்க்கம் இச்செயலில் ஈடுபட்டதை வரலாற்றுச் சான்றுகள் உணர்த்துகின்றன. துறவிகள் மற்றும் பொதுநிலையினரைத் துன்புறுத்துதல் மற்றும் கொல்லுதல், பவுத்த கோவில்கள் / விகாரங்களை அழித்தல் மற்றும் பிற வைதீக சமயக் கோவில்களாக மாற்றுதல், பவுத்த புனித நூல்கள் / இலக்கியங்களை அழித்தல் என அழித்தொழிப்பின் பல்வேறு பரிணாமங்கள் விரிகின்றன.

புத்தர் சிற்பங்களின் உறுப்புகள் சிதைக்கப்பட்டு நீர்நிலைகளில் ஜீக்கி வீசப்பட்டன அல்லது ஆழக் குழிதோண்டிப் புதைக்கப்பட்டன. புத்தர் சிற்பங்களின் தலைகள் தேர்ந்த தச்சர்கள் / சிற்பிகளைக் கொண்டு நேர்த்தியாகத் துண்டிக்கப்பட்டன. தலைகளைத் துண்டித்ததை புத்தரின் அடையாள அழிப்பு நடவடிக்கையாகக் கொள்ளலாம்.

கி.பி. 14-ம் நூற்றாண்டு வரை தாக்குப்பிடித்து தழைத்திருந்த பவுத்தம், அதற்கடுத்து வந்த விஜயநகரப் பேரரசு ஆட்சியில் நடந்த கடுமையான தாக்குதலை எதிர்கொள்ள இயலாமல் அழிந்தது. இன்று நம் முன் காணக்கிடைக்கும் பவுத்தச் சிற்பங்கள் அனைத்தும் கி.பி. 14ம் நூற்றாண்டிற்கு முந்தைய காலக்கட்டத்தில் செய்யப்பட்டவையாகும். திருச்சிராப்பள்ளி அருங்காட்சியகத்தில் காட்சிப்படுத்தப் பட்டுள்ள முசிறியைச் சார்ந்த புத்தர் சிற்பம் கி.பி. 19-20ம் நூற்றாண்டைச் சார்ந்ததாகலாம்.


‘பக்தி இயக்கத்தின் பெரும் செல்வாக்கு மற்றும் விளைவுகளின் காரணமாக, 14ம் நூற்றாண்டின் இறுதியில் தமிழ்நாட்டில் பவுத்த சிற்பங்கள் உருவாக்கத்தில் பெரும் வீழ்ச்சி நிகழ்ந்ததை இச்சிற்பங்களைப் பற்றிய பகுப்பாய்வு நிரூபிக்கிறது. செழுமையான இலக்கிய மரபுகள் இருந்தபோதிலும் பவுத்தக் குடியிருப்புகள் எவையும் இதுவரை கண்டறியப்படவில்லை’ (ஏ.சூ. ளுசiniஎயளய னுநளமையn 1998 : 156)

புத்தர் சிற்பத்தின் தலையை உடைத்தால் புதையல் கிடைக்கும் எனப் பொதுமக்களிடம் ஆசையூட்டப்பட்டதை ‘தலையைக் கிள்ளி தனத்தை எடுத்து’ எனும் பழம் பாடல் உணர்த்தும். தலையை உடைத்தும் புதையல் கிடைக்கவில்லை என்பதை உணர்ந்த மக்கள் ஏமாந்தனர். ஆனாலும் சிற்பத்துக்கு அடியில் புதையல் இன்னும் இருக்கிறது எனும் மூடநம்பிக்கையும் புத்தரை ‘பூதம்’ என உரைப்பதும் பெரும் அவலம்.

இச்சிற்பத்தை அருங்காட்சியகத்தில் பாதுகாப்பாக வைத்திட நில உரிமையாளரிடம் அரசு அதிகாரிகள் கேட்டபோது அவர் மறுத்துவிட்டார். தமது நிலத்திலேயே சிறு மேடை அமைத்து அதில் பாதுகாப்பாக வைக்குமாறு யோசனை கூறியதற்கும் அவர் செவிமடுக்கவில்லை. தற்போது புத்தர் நெஞ்சுவரை வரப்பில் புதைந்து கிடக்கிறார். புத்தராகப் பிறப்பது பெரும் துயரம் தான் போல.








ஆற்றுப்படை வெளியீடு